விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 214 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 05 வெள்ளிக்கிழமை (21.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### யாழ்.பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு

## நுழைவாயில் வளைவில் காணாமல்போன நந்திகள்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல கலைக்கழகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழா வில் நுழைவாயி லின் இரு மருங் 15




### யாழ்.பல்கலை பட்டமளிப்பில்

## அனைவரையும் கண்கலங்க வைத்த நெகிழ்ச்சி சம்பவம்




15

### 42 மேலதிக வாக்குகளால்

## மத்திய வங்கி சட்டமூலம் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் 42 மேலதிக வாக்குகளால் நேற்று பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 66 வாக்கு களும், எதிராக 24 வாக்குகளும் வழங்கப்பட்ட நிலை யில் 42 மேலதிக வாக்குகளால் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. (ம-7)

### 328 பொருட்களின்

## இறக்குமதிக்கான கட்டுப்பாடு நீக்கம்

(கொழும்பு)

328 பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடு கள் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய தெரிவித்துள்ளார்.


நாடு தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த காலப்பகுதியில் 16

# ரணில் - ஜெய்சங்கர்

# நேற்றிரவு சந்திப்பு

- இரு தரப்பு உறவு தொடர் பில் கலந்துரையாடல்
- பிரதமர் மோடியுடன் ரணில் இன்று கலந்துரை யாடுவார்.
- தமிழர் பிரச்சினை தொடர் பில் ரணில் - மோடி விவா திப்பர்.
- 13ஆம் திருத்தத்தை அமுல் படுத்த மோடி ரணிலுக்கு அழுத்தம் கொடுக்கலாம்.

(16ஆம் பார்க்க)



## பால்மாவின் விலை குறைப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட் களின் விலை குறைப்பின் கீழ் பால் மாவின் விலையை குறை க்க லங்கா சதொச தீர்மானித் துள்ளது.

இதன்படி, லங்கா சதொச முழு ஆடை பால் மா 400 கிராம் பொதி 15

## ரணிலிடம் அரசியல் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்

### ஜே.வி.பி தலைவர் அநுர குமார



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் அரசியல் தீர்வை எதிர் பார்ப்பது முட்டாள்தனமானது என்று தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித் தார்.

இந்திய விஜயத்துக்கு முன்னர் தமிழ்க் கட்சி 15

### சாவகச்சேரியில்

## வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரி விற்குட்பட்ட கல்வயல் பகுதி யில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தவர் நேற்று முன் தினம் புதன் கிழமை சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத் 15

## குறுக்குவழியில் தீர்வை பெற முயலாதீர்கள்

### தமிழ்த் தரப்பிடம் அமைச்சர் பந்துல



(கொழும்பு)

தாங்கள் விரும்பும் தீர்வை ஜனாதி பதியிடம் குறுக்குவழியில் தட்டிப் பறிக்க லாம் என்று சம்பந்தன் தலைமையிலான குழுவினர் முயல்கின்றனர் என்று அமைச்சர் பந்துல குணவர்த் 15

### ஜனாதிபதி ஒருபோதும் தீர்வு தரமாட்டார்

## ராஜபக்ஷக்கள்போல் ரணில் தமிழர்களை ஏமாற்றுகின்றார்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தமிழ் மக்களை ஏமாற்று கின்றார். அவர் தமிழ் மக் களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு தரமாட்டார்" என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவருமான 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 1ம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு



அன்புடையீர்

கடந்த 01.08.2022 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் புதல்வி

அமரர்

## உதயச்சந்திரன் தேனுஷா

அவர்களின் திவச தின நிகழ்வு இன்று (21.07.2023) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
ஆனந்தகானம், ஊரெழு கிழக்கு.

(16356)

# இந்திய ரூபாவினை வெளிநாட்டு வர்த்தக நாணயமாக ஏற்றது இலங்கை

இந்திய ரூபாயானது அதன் அமைப்பில் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் என இலங்கை ஏற்கனவே இந்தியாவுக்கு அறிவித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி நேற்று தெரிவித்தார்.

எங்கள் தேசிய நாணயங்களின் வர்த்தகத்தைப் பொறுத்தவரை, இலங்கை ஏற்கனவே இந்திய ரூபாயை அவர்களின் அமைப்பில் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக அறிவித்துள்ளது." என்று அவர் புதுடில்லியில் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நிதிப் பொருளாதார உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு இந்தியாவிற்கு விருப்பம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதைப் பயன்படுத்துவது இந்தியாவின் தனியார் துறை மற்றும் வர்த்தகத் துறையில் ஈடுபடும் நபர்களைப் பொறுத்தது என்று அரிந்தம் பாக்சி குறிப்பிட்டார்.

இந்த நிதி மற்றும் பொருளாதார தொடர்பை நாங்கள் ஆழப்படுத்த விரும்புகிறோம். இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தின்போது அது குறித்து மேலும் பல தீர்க்கமான முடிவுகளை எட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# யாழ் - மதுரை விமான சேவை விரைவில் ஆரம்பம்

மதுரை மற்றும் யாழ்ப்பாணத்துக்கு இடையில் விரைவில் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

இதற்காக இந்தியாவிலுள்ள தனியார் விமான சேவை நிறுவனங்களுடன் இலங்கையின் விமானப் போக்குவரத்து அமைச்சு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த விமான சேவையை வாரத்திற்கு 7 நாட்களும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை மதுரை மற்றும் கொழும்பு இடை யேயான முதலாவது சர்வதேச விமான சேவை 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது மதுரையிலிருந்து நாளாந்தம் கொழும்பிற்கான நேரடி விமான சேவையை ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## விசா ஆலோசனைகள்

- ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான அரிய வாய்ப்பு
- கனடா இலகுவில் செல்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்
- கொசோவா நாட்டில் Working visa 15 நாட்களில் பெற்றுத்தரப்படும். (முற்பணம் எதுவும் இல்லை)
  அனுபவம் தேவை இல்லை
- சர்பியா நாட்டில் Tailor வேலைவாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். (C-6939)

Hybrid International Hub Pvt Ltd, Jaffna
**076 250 0098, 021 222 1265**



## பெயர் மாற்ற அறிவித்தல்

வேலணை மேற்கு J/19 ஐ சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல. 516273879V கொண்ட **சுவாமிநாதன் லோகநாயகி** ஆகிய நான் இன்று முதல் **சுவாமிநாதன் உலகநாயகி** எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
சுவாமிநாதன் உலகநாயகி

(16360)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17.02.1958

மறைவு
01.08.2022

அமரர்

## திரு. சுப்பிரமணியம் இலட்சுமணன்

( ஓய்வு பெற்ற உப அதிபர் மற்றும் இணைந்த கணித ஆசிரியர் – யாழ். இந்துக் கல்லூரி )

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்,
பல மாணவர்களின் கல்வியில் கலங்கரை விளக்காய்,
எம் வாழ்க்கைப் பாதையின் வழிகாட்டியாய்,
நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காய் அயராது உழைத்து,
எங்கள் வாழ்க்கையை செழுமைப்படுத்திய
எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்திடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
காலங்கள் எத்தனை சென்றாலும், உங்கள்
நினைவு சிறிதளவேனும் குறையாது
எங்கள் நினைவுகளில் எப்பொழுதும்
வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(16357)

442, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் குன்றா
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண

# பிரதமர் மோடி வலியுறுத்த வேண்டும்

## தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் இந்தியப்பிரதமருக்கு கடிதம்

**(டில்லி)**

**இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க உள்ள நிலையில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திட இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பில் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளதாவது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள், சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய இலங்கை அதிபரிடம் வலியுறுத்த வேண்டும்.

இலங்கை தமிழர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதிலும், கோரிக்கைகள் நிறைவேற்றுவதிலும் தமிழ்நாடு அரசும், தி.மு.கவும் உறுதியாக உள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் சமூக, அரசியல், பண்பாடு மற்றும் பொருளாதார உரிமைகளைப் பாதுகாப்பது அவசியம். இலங்கையில் உள்ள தமிழர்கள் இலங்கையின் சமமான குடிமக்களாக கண்ணியமான வாழ்க்கையை வாழ வேண்டியது அவசியம்.

இலங்கையில் உள்ள தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆக்கபூர்வமான, உறுதியான தீர்வை எட்ட இலங்கை அதிபரிடம் பிரதமர் மோடி வலியுறுத்த வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)



## மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் பொலிஸ் சேவை கேலிக் கூத்தாக்கப்படும்

### கொந்தளிக்கும் சரத்வீரசேகர


(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழர்களின் பிரதிநிதிகள் அல்ல என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சாடியுள்ளார்.

அத்துடன் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு எப்போதும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதாகவும் பொருளாதார பாதிப்பிற்கு மத்தியில் அதிகார பகிர்விற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்கினால் பொலிஸ் சேவை கேலிக்கூத்தாக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். நமசிவாயம் நடேசமூர்த்தி

(மண்டைதீவு)

(திதி:பூர்வபட்ச சதுர்த்தி-21.07.2023)

பறந்தது பன்னிரு மாதம் பார்த்திருக்க பிறந்தது ஓராண்டு
காலனைக் காலால் உதைத்தவன் நாமம் கொண்டவனே!
ஐந்தெழுத்துடையான் ஈன்றெடுத்த தவக்கொழுந்தே!
பேரோடு பொருள் தந்து நல்லறிவோடு
சீர் பொருத்தக் குறைவிலா வாழ்வமைத்து
தானில்லாக் காலம் தன் சந்ததி வையத்துள் வாழ்வாங்கு வாழ
புண்ணியம் புரிந்த எங்கள் தெய்வம்
புரி குழலொடு விரி விழியுடையாள்
வேப்பந் திடலாள் திருப்பாதம்-சேர்ந்தொழுக
முத்துமாரித் தாயவளை தினமும் வேண்டுகின்றோம்.

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை.

மலர்வு : 24.08.1924 உதிர்வு : 31.07.2022

(6351)

32/2, 3 வது ஒழுங்கை,
C.பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெஸ்டில் 600 விக்கெட்டுகள் ஸ்டுவர்ட் பிராட் சாதனை



பேட் கம்மின்ஸ் தலைமையிலான ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இங்கிலாந்து- அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 4 ஆவது ஆஷஸ் டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில், டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தார். இதனால், அவுஸ்திரேலிய அணி முதலில் பட்டிங் செய்தது. இந்த போட்டியின், முதல் நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலியா அணி 83 ஒவரில் 8 விக்கெட்டுக்கு 299 ரன்கள் எடுத்தது.

இந்நிலையில், இந்த போட்டியில் முதலாவதாக களமிறங்கிய டேவிட் வார்னர் மற்றும் உஸ்மான் கவாஜா ஜோடி தலா 32 மற்றும் 3 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. இதில், பிராட் வீசிய பந்தில் கவாஜா அவுட்டானதை அடுத்து, ஸ்டுவர்ட் பிராட் தனது 599 ஆவது விக்கெட்டை வீழ்த்தினார்.

இதைத்தொடர்ந்து, அவுஸ்திரேலியா அணியின் டிராவிஸ் ஹெட், பிராட் வீசிய பந்தை பவுண்டரி அடிக்க முயற்சித்தபோது, அந்த பந்து ஜோ ரூட்டிடம் கேட்சாக மாறியது.

இதன் மூலம், பிராட் தனது 166 ஆவது டெஸ்டில் முதல் இன்னிங்சின் 50 ஆவது ஒவரில் 600வது விக் கெட்டை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட்டுகளை வீழ்த்திய 5 ஆவது வீரர் என்ற சாதனையை ஸ்டுவர்டு பிராட் படைத்துள்ளார். (4)

# இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் பாகிஸ்தான் வெற்றி



இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது. இலங்கை- பாகிஸ்தான் அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி காலியில் நடந்து வந்தது.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி 312 ஓட்டங்களும், பாகிஸ்தான் அணி 461 ஓட்டங்களும் குவித்தன.

பின்னர் இரண்டாவது இன்னிங்சை ஆடிய இலங்கை 279 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது. அதிக பட்சமாக தனஞ்செய டி சில்வா 82 ஓட்டங்கள் குவித்தார்.

பாகிஸ்தான் தரப்பில் அபரர் அகமது, நோமன் அலி தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து 131 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி பாகிஸ்தான் களமிறங்கியது.

நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில், பாபர் ஆசம் 24 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார், ஷாகீல் 30 ஓட்டங்களில் வெளியேறினார்.

இமாம்-உல்-ஹாக் 50 ஓட்டங்களை கடந்து நிலைத்து நின்று ஆட 6 விக் கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்கள் எடுத்தது. 4 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது பாகிஸ்தான்.

இவ்விரு அணிகளுக்கான 2 ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பில் 24 ஆம் திகதி தொடங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)



கோப்பாய் தேசோதய சபையினால் உரும்பிராய் கிழக்கு ஜெயபுரம் அண்ணா ஸ்ரார் உதைபந்தாட்ட அணிக்கு தேவையான விளையாட்டு சீருடைகள் மற்றும் விளையாட்டு உபகரணம் என்பன அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்-கஜிந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2869

கம்ஷாயினி

இந்த ஸ்டிக்கர ஒட்டாம இருந்தா
கூட நாங்க கதவ கரெக்ட்டா திறந்திருவோம்டா...
இத ஒட்டி மண்டைய குழப்பி விட்ரீங்களேடா
அப்ரசண்டிகளா




அர்ச்சுன்

நிலுக்சி

பிரண்டை துவையல் பண்ணி சாப்பிடறது
உடம்புக்கு நல்லதுன்னு சொன்னாங்க...
அதான் ஒரே குழப்பமா இருக்கு... எந்த எந்த
பிரண்டை
துவையல்
பண்றதெங்கறது
தான்
(ஹலோ
எச்சூஸ்மி
பிரண்ட்ஸ்)



றியாஷ்

விதுரா

மஞ்சளா இருக்கிற எலுமிச்சைய
பிழிஞ்சா வெள்ளையா சாறு வருது.
வெள்ளையா இருக்கிற முட்டைய
உடைச்சா மஞ்சளா கரு வருது
இப்படி தான் வாழ்க்கையும்...
நாம ஒன்று நெனச்சா அது ஒன்னு நடக்கும்.



பதுமிதன்

மயிலுக்கும் கிளிக்கும் என்ன வித்தியாசம்?



பார்த்தியா...
நான் இந்தியாவுக்கே
தேசியப் பறவை.



போடா டேய்...
நான் இந்தியாவுக்கே
ஜோசியப் பறவைடா..



முதுகுல கொசு
இருக்கு அடி னு
பொண்டாட்டி கிட்ட
சொன்னேன்.

வாய்ப்ப
பயன்படுத்தி
கிட்டா...

ஆசிரியர்- இது யாரோட கையெழுத்து?

பையன்-என் அப்பாவோட கையெழுத்து?
ஆசிரியர்- உன் அப்பா பெயர் என்ன?
பையன்- ஏழுமலை.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாக ரணில் பதவியேற்று நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தி

(கொழும்பு)

நாட்டின் எட்டாவது நிறை வேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று நேற்றுடன் ஒரு வருடம் பூர்த் தியாகியுள்ளது.

இதற்கமைய 1981 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க சட்டத் தின் கீழ் கடந்த வருடம் ஜூலை மாதம் 20ஆம் திகதி பாராளு மன்ற உறுப்பினர்களின் பெரும் பான்மை வாக்குகளால் இலங் கையின் எட்டாவது நிறை வேற்று ஜனாதிப்தியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட் டார்.

அதற்கமைய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினா மாவை யடுத்து ஏற்பட்ட ஜனாதிபதி வெற் றிடத்திற்கு ரணில் விக்கிரம சிங்க தெரிவுசெய்யப்பட்டார். குறித்த வாக்களிப் பில் ரணில் விக்கிரம சிங்க 134 வாக்கு களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பு

(கொழும்பு)

வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு அடுத்த மாதம் மேலும் அதிகரிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தேவையான மதிப்பீட்டின் பின்னர் அனைத்து வாகனங்களுக்கான வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

ஓம் நமசிவாய
முத்துமாரி அம்மன் துணை

## திருநெல்வேலி அருள்மிகு நீலாயதாட்சி-சுவாமி அம்மன் உடனுறை காயாரோணேசவர இரதோற்சவம்

### அம்பாளைத் தரிசித்துஐம்பெரும்பாவங்கள் நீங்கி செல்வம் பெருகும், கல்வி ஓங்கும், மகப்பேறு உண்டாகும் பேரின்பம் பெறலாம்

### "ஓம் நமசிவாய"



**பாரேர் தொழவிண்ணோர் பறையம் மதில் மூன்றும்**
**ஆரார் அழல் ஊட்டி அடியார்க்கு அருள் செய்தான்**
**தேரார் விழவுவாச் செல்வன் தரை சூழ்ந்து**
**காரர் கடல் நாகைக்காரோ ணத்தான.**

"மானிடம் செழிக்க மாமழை பொழிந்திட"
திருஞானசம்பந்தர் முதல் திருமுறை"

பூவுலகத்தவர் தொழ, தேவர்கள் பணிய மூன்று மதில்களை நெருப்புக்கு இரையாக்கிய அடியவர்க்கு அருள் செய்தவன், **தேர்த்திருவிழா நடைபெறும்.** செல்வச் சிறப்புடையவனாக, அலைகடல் சூழ் சிவபூமி இலங்கை, திருநெல்வேலி நீலாயதாட்சி உடனுறைகாயா ரோகுணேஸ்வரத்தான்.

புண்டரீக முனிவர், தீர்த்தங்களில் நீராடிச் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட எம்பெருமான் காட்சி கொடுத்து தம் இரு கரத்தால் தம் காயத்தோடு ஆரோகணம் செய்தார். **இறைவன் தன் உடம்போடு சேர்த்தபடியால் காயாரோ கணர் எனப் பெயர் பெற்றது.** "ஓம்நமசிவாய" காயம் என்றால் உடம்பு, ஆரோகணம் என்றால் உடம்போடு சேர்த்தல்.

அழகிய நீல நிற கண்ணை உடையவள் என்பதால் கருந்தாடல் கண்ணி - நீலாயதாட்சி என வரலாறு சிறப்பித்ததும் காஞ்சி, மதுரை, ஆரூர் நாகை போன்ற ஐந்து ஆட்சி பீடங்களில் **அருள்மிகு நீலாயதாட்சி** விளங்குகிறது.

மானிடம் செழிக்க மாமழை பொழிந்த அருணகிரிநாதர் திருப்புகழ் 832, 833, 834 மூன்று பதிகங்களில்**முத்தியும்** 832 **கழல் மறந்திடேன்** 833 திருவடி கூட **அழியா வரமே தருவாய்** எனவும் பாடியதில் **834 வது திருப்புகழ் தினமும் ஓதுவோம்.**

**விழுதாதெனவே கருதா துடலை வினைசேர் வதுவே புரிதாக**
**விருதா வினிலே யுலகா யதமே லிடவே மடவார் மயிலாலே**
**அழுதா கெடவே அவமா கிடதா எடைவே கழியா துணையோதி**
**அலர்தாளடியே னுறைவாய் மருவோ ரழியா வரமே தருவாயே**
**தொழுதார் வினைவே ரடியோ டறவே துகள் தீர் பரமே தருதேவா**
**சுகிர் பூபதியே கருணா லயனே சுகிர்தா வடியார் பெருவாழ்வே**
**எழுதா மறை மா முடிவே லிறைவன் எனையா ளுடையோனே**
**இறைவா எழுதா வதுகா தனையே இணை நா கையில்வாழ் பெருமானே.**

விழுகின்ற சுக்கிலம் என்று உடலைக் கருதாமல் வினை பெருகதலையே விரும்புவதாய் வாழ்நாள் முழுமையும் கழித்து போகாமல் உன்னைப் புகழ்ந்து, துதித்து, மலருற்ற உன் திருவடியை அழியாததுமான வரத்தைத் தந்தருள்க! தொழுகின்ற அடியவர்களுடைய வினையின் வேர் அற்றுப்போக தேவர்களுக்கு அரசே! கருணையானவனே வேதத்தின் சிறந்த முடிவும் பொருளே! கூர் வேலை ஏந்தும்கந்தனே பெருமானே அழியா வரமே திருவடியைக்கூட தருவாயே! "ஓம்முருகா"

மானிடம் செழிக்க மாமழை பொழிந்த
திருஞான சம்பந்தர் முதலாம் திருமுறையில்

**புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய**
**நனையும் சடைமேலார் நகுவெண் தலை சூடி**
**வினையில் அடியார்கள் விதியால் வழிபட்டுக்**
**கனையும் கடல் நாகைக்காரோ ணத்தானே**

அடியார்கள் பூசா விதியில் உள்ளவாறு ஆசார சிலராக ஆண்கள் வேட்டி சால்வை அணிந்தும், பெண்கள் முடிசிந்தாமல் கொண்டை போட்டும் பின்னியும் பூக்கள் அணிந்து, நெற்றி நிறைய திருநீறும் அணிந்து, ஈசனை மெய்யன்பால் வணங்கிப் போற்றும் அடியவர்கள் வினையில் இருந்து நீங்கப் பெற்றவர் எனவும் திருப்பதிகம் பாடுபவர்கள் அழியாது வடிவுடைய அழகினராய் விளங்கி மங்கல ஒலி முழங்கும் வானுலகை அடைவார்கள் என ஞானசம்பந்தர் 84 ஆவது முதலாம் திருமுறையில் பதிந்துள்ளார். "ஓம்நமசிவாய"

மானிடம் செழிக்க மாமழை பொழிந்த சம்பந்தர் , அப்பர், சுந்தரர், மணிவாசகர், அருணகிரிநாதர் திருவடிகளை வணங்குவோம்.

அருள்மிகு நீலாயதாட்சி அம்மன் உடனுறை காயாரோகணேசுவர சுவாமி வழிபட்டு திருவருள் பெறுவோம்.

- மூவர் திருமுறைகள், திருப்புகழும் ஓதி அருள் பெறுவோம். ராகு-கேது தோஷங்களுக்கு பரிகாரம் பெறுவோம்.
- சனிக்கிழமையில் புதுமலர் கொடு சனிஸ்வரனுக்கு பூசனை செய்தால் காலைக் கதிரவனைக் கண்ட பனிபோல் யாவரது துன்பம் நீங்கும்.
- வியாழக்கிழமை தோறும் செஞ்சந்தனத்தால் நீலாயதாட்சி அம்மிகையை அருட்சித்தால் இறை அருளுடனும் பிள்ளைப்பேறும் உண்டாகும்.
- இந்தியா இதே நாமத்திருக்கோயிலின் ஒரு பகுதி திருப்பணி செய்து வழிபட்டு சாலிசுக மன்னன் முத்தி அடைந்தான். நாமும் இங்கு பல திருப்பணி வேலைகளை பூரணமாக்கி நற்கதி பெறுவோம்.



உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினில் உத்தமனைக் காணல் ஆன்றோர் வாக்கு. நாமும் ஆசார சீலராக நித்தமும் இறைவனைத் தொழுது இன்புறுவோமாக!

"ஓம் நமசிவாய"

(C-6945)

க.கு.க.சிவபாலன் (K.K.K)

# இராசிபலன்

21.07.2023
ஆடி 05, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி முழுவதும்

மகம் பி.ப 1.32 மணிவரை
சுபநேரம்-6.01-7.31 மணிவரை
இராகுகாலம்-10.31-12.01 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்-
திருவோணம், அவிட்டம்

வளவன்



மேஷம்

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும், பிறர் உதவியுண்டு.



கடகம்

தொலை தூரத்தில இருந்து சுப செய்திகள் வந்து சேர லாம், வருமானம் திரு ப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.



துலாம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசனசுகமுண்டு.



மகரம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.



ரிஷபம்

பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.



சிம்மம்

குடும்பப் பொறுப்புகள் கூடும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு.



விருச்சிகம்

செய் தொழில் மேன்மையுண்டு, உறவினர்கள் உங்கள் இல்லம் வந்து சேரலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




கும்பம்

புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், போசன சுகமுண்டு.



மிதுனம்

உறவினர்களின் ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



கன்னி

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், இடமாற்றம், ஊர் மாற்றம் என்பன இடம்பெறலாம், முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.



தனுசு

வழிபாட்டில் ஆர் வம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.



மீனம்

உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், கௌரவமான சம்பவங்கள் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.

வாழ்க்கையின் மிகப்பெரிய இலட்சியம் அறிவல்ல செயல்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணியில் வீடு புகுந்து நகை, பணம் திருட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி நாவற்காட்டு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் புதன் கிழமை நகை மற்றும் பணம் ஆகியன திருடப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து நுழைந்த திருடர்கள் வீட்டில் வைக்கப்பட்டிருந்த 7பவுண் நகைகள் மற்றும் 65ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமப் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-30)

# தனியார் பேருந்துகளில் ஓகஸ்ட் முதல் திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

**தனியார் பேருந்துகள் தொடர்பில் பொது மக்களிடம் இருந்து பல்வேறு முறைப்பாடுகள் வருவதனால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் தனியார் பேருந்துகளில் திடீர் சோதனை முன்னெடுக்கப்படும் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தலைவர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணத்தில் செயற்படும் தனியார் பேருந்தில் பயணிகளுக்கான பற்றுச்சீட்டுகள் வழங்காமை, பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிடல் மற்றும் பயணிகளுக்கு மீதிப் பணம் வழங்காமை குறித்த முறைப்பாடுகள் அதிகமாக கிடைக்க பெறுவதால் ஓகஸ்ட் 1 ஆம் திகதி முதல் இது தொடர்பான பரிசோதனைகள் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் திடீர் பரிசோதனை அதிகாரிகளால் வடமாகாணத்தின் சேவையில் ஈடுபடும் சகல தனியார் பேருந்துகளிலும் தீவிரப்படுத்தப்பட உள்ளது.

உள்ளூர் மற்றும் மாவட்டங்களிற்கிடையேயான பேருந்துகளில் பயணிக்கும் சகல பயணிகளும் தங்களுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தி கொள்ளவும். இது தொடர்பான முறைப்பாடுகளை 021228 5120 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கு மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய ஆடிப்பூர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகி அம்மன் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம் நாளை 22ஆம்திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது என ஆலயபரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-5)

# ஆடிப்பிறப்பு கவிதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆடிப்பிறப்பினை முன்னிட்டு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற கவிதைத்திருவிழாவின் ஒரு அங்கமாக ஆடிப்பிறப்பு கவிதைப் போட்டி வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நடத்தப்படவுள்ளது என யாழ். தமிழ்ச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை மட்டப் போட்டி, திறந்த பிரிவுப் போட்டி என இரண்டு பிரதான பிரிவுகளாக நடைபெற உள்ளது.

கவிதைகள் அனைத்தும் ஆடிப்பிறப்பு தொடர்பானவையாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

கவிதைப் போட்டியில் பாடசாலை மட்டத்திலும், திறந்த போட்டியாகவும் நடத்தப்படும்.

பாடசாலை மட்டத்தில் இடை நிலை பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கிடையே நடத்தப்படும்.

திறந்த போட்டியில் பாடசாலைக்கு வெளியே 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.

சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும். பாடசாலை மாணவர்கள், அதிபர் ஊடாக சொந்த ஆக்கமாக உறுதி செய்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

போட்டிக்கான கவிதைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி. வைக்கப்படுதல் வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி.

கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "ஆடிப்பிறப்பு கவிதைப் போட்டி" என எழுதப்பட்டு, **தலைவர் யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம், இல.15 சிறாம் பியடிலேன், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மட்டப் போட்டியில் மாவட்ட ரீதியாக முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்படும்.மாகாண மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் சிறப்புப் பரிசு வழங்கி வைக்கப்படும்.

திறந்த போட்டியில் பங்குபெற விரும்புபவர்கள் தங்கள் கவிதையினை மேற்குறித்த முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (4-5)

# நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய ஆடிப்பூர திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய ஆடிப்பூர திருவிழா நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்போது காலை விசேட அபிஷேகங்களை தொடர்ந்து அம்பாள் அழகிய தாமரைபூ பீடத்தில் எழுந் தருளி வீதியுலா வரும் காட்சி இடம் பெறவுள்ளது. (4-5)

# கொக்குவில் கிழக்கு ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4-5)

# ஏழாலை அபிராமி அம்பாள் ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அருள்மிகு ஸ்ரீ அபிராமி அம்பாள் ஆலய திருவிழா நேற்று 20 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4-5)

# மந்துவிலில் மோதல் பெண் உட்பட மூவர் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரி விற்குட்பட்ட மந்துவில் பிரதேச த்தில் கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்ப வத்தில் பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி மோதல் சம்பவத்தில் ஒருவர் கத்திக் குத்திற்கு இலக்கான நிலையிலும் மற்றைய இருவரும் தாக்கப்பட்ட நிலையிலும் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# தென்மராட்சியில் பாலிற்கு நிர்ணய விலை வேண்டும்

## பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் பசுப் பாலிற்கு விலை நிர்ணயம் மேற்கொண்டு பால் உற்பத்தியாளர்களின் நலனை பேண தென்மராட்சிப் பிரதேச செயலகம் மற்றும் உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பிரதேச மட்ட விவசாய குழுக் கூட்டத்தின் போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பால் உற்பத்தியாளர்கள் கருத்து தெரிவிக்கையில், தென்மராட்சியில் தற்போது கால்நடை வளர்ப்பதென்பது சவால் நிறைந்த விடயம். கால்நடை திருட்டு வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

அத்துடன் கால்நடை தீவனங்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நிலையில் பால் உற்பத்தியாளர்களிடம் பால் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் ஒவ்வொரு கிராமங்களில் ஒவ்வொரு விலையில் பாலை கொள்வனவு செய்கின்றனர்.

சில இடங்களில் லீற்றர் 195ரூபாய்க்கும் வேறு சில இடங்களில் 155 ரூபாய்க்கும் பால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இது தொடர்பாக கேள்வி எழுப்பினால் பாலின் தரம் குறைவு என கொள்வனவு நிறுவனங்கள் சாட்டுக் கூறுகின்றன.எனவே பாலிற்கான விலையை நிர்ணயம் செய்து பால் உற்பத்தியாளர்களின் நலன் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் பதிலளிக்கையில்,

பால் கொள்வனவு செய்யும் பிரதான நிறுவனங்களுட னும் பால் உற்பத்தியாளர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு பாலுக்கு நியாயமான விலை நிர்ணயம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார். (4-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 லட்சம் சிறார்கள் போசாக்கின்மையால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 9 மாகாணங்களையும் உள்ளடக்கிய கணக்கெடுப்பின்படி 5 வயதுக்குட்பட்ட சுமார் 10 இலட்சம் சிறுவர்கள் மற்றும் பெண்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

5 வயதுக்குட்பட்ட 300.746 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் 671.142 பெண்கள் உட்பட நாடு முழுவதும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 971.888 என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான மக்கள் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 வயதுக்குட்பட்ட 85,847 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளும் 196.197 பெண்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் 5 வயதுக்குட்பட்ட 30.393 போசாக்கு குறைபாடுள்ள சிறு வர்களும் 126.976 பெண்களும் தென் மாகாணத்தில் 5 வயதுக் குட்பட்ட சிறுவர்கள், 37.032 பேரும், பெண்கள் 79.254 பேரும் இருப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடமேற்கு மாகாணத்தில் 47.765 குழந்தைகளும் 68. 763 பெண்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வடமத்திய மாகாணத்தில் 19.067 சிறுவர்களும் 38.869 பெண்களும் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஊவா மாகாணத்தில் 5 வயதுக்குட்பட்ட 18.278 சிறுவர்களும் 46.175 பெண்களும் சப்ரகமுவ மாகாணத்தில் 17.180 சிறுவர்களும் 54.394 பெண்களும் இருப்பதாக தெரிய வந்துள்ளது. (நி-5)


## சிவதொண்டர்கள் தேவை

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்திற்கு சிவதொண்டுகள் ஆற்றவும், நன்கு-சமையல் வேலை தெரிந்த,குடிப்பழக்கம் அற்ற ஒருவர் தேவை.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.விண்ணப்பங்கள் யாவும்.

(16348)

அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள்
மகாதேவ ஆச்சிரமம்.
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
என்ற முகவரிக்கு 31.07.2023 முன்னர் அனுப்பவும்.



## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகிறோம்

யா/திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை
ஆசிரியை திருமதி. மேரி றெஜினா கமலம்
நிக்காசியஸ் மரியதாசன்




கத்தோலிக்க கல்விதனை கருத்துடனே
கற்பித்து கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
கல்விச்சாலையில் தன் கடமைதனை
செவ்வனே நிறைவேற்றி, கலைநிகழ்ச்சிகள்
பல களிப்புடனே அரங்கேற்றி பணியில் இருந்து
ஓய்வு பெறும் எம் ஆசிரியை அவர்கள்
தம் ஓய்வு காலத்திலும்
நீண்ட ஆயுளோடும் சகல செல்வங்களும் பெற்று
வாழ இறையாசியை வேண்டி நிற்பதோடு
அவருக்கு மணிவிழா வாழ்த்துக்களையும்
தெரிவித்து மகிழ்கின்றோம்.

(சி-6944)

பாடசாலைச் சமூகம்
யா/ திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.கலாசுலோஜினி
சபாரட்ணம்
B.A.PGDE NDT (PRI)



திருமதி.சர்மிளா
திருமுரளிதாஸ்
B.A.PGDE NDT (Sp.Ed)

Best Wishes

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப்
பெற்ற எமது ஆசிரியை திருமதி.கலாசுலோஜினி சபாரட்ணம்
அவர்களையும் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின்
கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற எமது ஆசிரியை
திருமதி. சர்மிளா திருமுரளிதாஸ் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

(16344)

வாழ்த்துவோர்-
பாடசாலைச் சமூகம், யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை


## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

*நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 112 இன் கீழான விண்ணப்பம்*

வழ.இல: நம்பிக்கைச் சொத்து/62/2023

1.நாகராசா மன்மதராசா
2.நாகரட்ணம் பிரதீபன்

தலைவர் மற்றும் செயலாளர்
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
வடமேற்கு கேசாவில் ஸ்ரீ முத்து விநாயகர்
தேவஸ்தானம் தர்மபரிபாலன சபை
-மனுதாரர்கள்-

மேற்படி இலக்க வழக்கின் மனுதாரர்களினால்

இவ் வழக்கோடு ம6 என அடையாளமிடப்பட்டுள்ள அமைப்புத் திட்ட விதிகளின் பிரகாரம் தெரிவு செய்யப்படுகின்ற தர்மபரிபாலன சபையே குறித்த ஆலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற பிரகடனமும் அவர்கள் இடத்து ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனங்களை உரித்தாக்கல் செய்யும் கட்டளையை கோரி

இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணம் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 29 ஆம் நாளன்று இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

ஆதன அட்டவணை 01

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "அளகிய வளவும் பத்தினியார் வளவும் நொச்சிக்காடும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு பத்து குளி இரண்டு தசம் மூன்று எட்டும் (நில.பர 10 குளி 2.38) கேசாவில் ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலயமும் கடைக்கட்டிடமும் கிணறும். இந்தப் பரப்பு பத்து குளி இரண்டு தசம் மூன்று எட்டிற்கும் எல்லை கிழக்கு: கேசாவில் வீதியும் நாவலடி வீதியும் கந்தையா மாசிலாமணியின் ஆதனமும் வடக்கு: கேசாவில் வீதி மேற்கு: பாலகிருஸ்ணன் பெண் ருக்குமணிதேவிக்கும் விஸ்வரத்தினம் நடேசபிள்ளைக்கும் பரமநாதன் நித்தியானந்தத்திற்கும் பொன்னையா கனகசபைக்குமுரிய ஆதனங்கள் தெற்கு: ஐ.சுப்பிரமணியத்திற்கும் விக்கினேஸ்வரன் பெண் சிறிமதிக்கும் இராமமூர்த்தி பெண் உதயகுமாரிக்கும் கந்தையா மாசிலாமணிக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்

ஆதன அட்டவணை 02

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு , நல்லூர் பிரதேச சபை J/98 வண்.வடமேற்கு கிராமசேவகர் பிரிவு துரைராஜா வீதி இல 28 "அம்மையாசீமாவும் நறுவிலியடியும் அம்மையாசீமாவும்" நில. பர இலா ஒன்று குளி பதினைந்தும் (நில. பர இலா குளி 15) வீடும். மலசலகூடமும் கிணறும் கிழக்கெல்லையில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் வான்பயிர் செய்பயிர்களும் இந்த நில.பர.இலா ஒன்று குளி பதினைந்திற்கும் எல்லைகள் கிழக்கும் வடக்கும் வ.பெரியதம்பியின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு சரவணமுத்து பொன்னம்பலத்தின் ஆதனம் இதடங்கலும்

மன்றின் கட்டளைப்படி

திகதி-04.07.2023

(16345)

பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 600 |
| தக்காளி | 420 | 500 | 500 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 220 | 300 |
| கோவா | 250 | 230 | 300 | 300 |
| கரட் | 400 | 500 | 500 | 550 |
| பூசணி | 120 | 100 | 100 | 150 |
| புடோல் | 160 | 140 | 150 | 200 |
| வாழைக்காய் | 180 | 160 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 240 | 150 | 160 |
| பாகற்காய் | 450 | 350 | 400 | 450 |
| வெண்டக்காய் | 200 | 160 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 180 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 350 | 400 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 500 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 65-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 300 | 300 |
| முள்ளங்கி | 120 | 140 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 150 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மாற்றி வெடித்ததில் பத்து பேர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவில் உத்தர் காண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் அலக்நந்தா பகுதியில் மின்மாற்றி வெடித்ததில் 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை ஆற்றின் கரையில் 20இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். இந்த நிலையில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்து உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

# பாகிஸ்தானில் மதில் இடிந்து விழுந்ததில் 11 பேர் உயிரிழப்பு, 6 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் மதிலொன்று இடிந்து வீழ்ந்ததால் சுமார் 11 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்லாமாபாத்தின் பெஷாவர் வீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இஸ்லாமாபாத், ராவல் பிண்டி பிரதேசங்களில் கடும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மதிலொன்று இடிந்த நிலையில், இடிபாடுகளிலிருந்து 11 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் மேலும் 6 பேர் காயமடைந் துள்ளனர் எனவும் சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (நி-5)



# நியூஸிலாந்தில்

# உலக கிண்ண தொடருக்கு முன் துப்பாக்கிச் சூட்டில் இருவர்பலி

(வெலிங்டன்)

நியூஸிலாந்து ஒக்லாந்தின் மையப்பகுதியில் பீஃபா மகளிர் உலக கிண்ண கால்பந்தாட்ட தொடர் ஆரம்பிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கட்டுமாணப் பணிகள் இடம்பெற்ற பகுதியொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் பொலிஸ் அதிகாரிகள், 6 பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய நபரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தை ஒரு பயங்கரவாத சம்பவமாக கருத முடியாது என நியூஸிலாந்து பிரதமர் கிரிஸ் ஹிப்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மகளிர் உலக கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் திட்டமிட்ட வகையில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பிரதமரை பதவி விலகக் கோரி பங்களாதேஷில் போராட்டம் ஒருவர் உயிரிழப்பு; நூற்றுக்கணக்கானோர் காயம்



(டாக்கா)

பங்களாதேஷில் எதிர்வரும் ஜனவரி மாதம் பிரதமரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம் பெறவுள்ளது. இந்நிலையில் தேர்தலுக்கு முன்னதாக அந்நாட்டு பிரதமரான ஷேக் ஹசீனாவைப் பதவி விலகுமாறு கோரி எதிர்க் கட்சியினர் மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள், தலைநகர் டாக்கா உள்ளிட்ட பல பகுதிகளில் பாரிய போராட்ட மொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்போராட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறையில் எதிர்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

# வட இந்தியாவில் வெள்ளத்தின் பாதிப்பு

# குவியும் குப்பைகள்



(டில்லி)

இந்தியாவின் வடக்குப் பகுதியில் கடும் வெள்ளம் ஏற்பட்டதில் அதிகமான குப்பைகளும் சேறும் சகதியும் சேர்ந்துள்ளன.

50 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடந்த வாரம், யமுனை ஆற்றின் நீர் அளவு உச்சத்தை எட்டியது.

கனத்த மழையால் அதன் அணைக்கட்டுகள் உடைந்தன. நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இடம்மாற்றப்பட்ட குடியிருப்பாளர்கள் இன்னமும் பாதிப்பிலிருந்து மீண்டுவரவில்லை.

வெள்ளநீர் வடிந்து வந்தாலும் தொற்று நோய்கள் பரவக்கூடும் என்று அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். உத்தரகாண்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட மின்னதிர்வால் குறைந்தது 16 பேர் உயிரிந்தனர். மின்சாரக் கசிவினால், படிக்கட்டு ஒன்றின் கைப்பிடி பாதிக்கப்பட்டது.

அதனைத் தொட்டவர்கள் உயிரிழந்ததாக அதிகாரிகள் கூறினர். (நி-5)

# உக்ரைனின் கருங்கடல் பகுதியில் ரஷ்யா தாக்குதல் சுமார் 60 ஆயிரம் தொன் தானியங்கள் சேதம்

(கீவ்)

உக்ரைனின் கருங்கடல் பகுதியில் ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் சுமார் 60,000 தொன் தானியங்கள் சேதமடைந்துள்ளன. அவை ஏற்றுமதிக்காக வைக்கப்பட்டிருந்த தானியங்கள் என உக்ரைன் தெரிவித்துள்ளது.

உகை உணவுப் பாதுகாப்பிற்கு மீண்டும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறினார்.

தாக்குதலைத் தொடர்ந்து, கோதுமையின் விலை கிட்டத்தட்ட 19 விழுக்காடு அதிகரித்துள்ளது.

கருங்கடலில் உக்ரைன் தானியங்களைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல வகைசெய்யும் ஓராண்டு உடன்பாட்டை ரஷ்யா முடிவுக்குக் கொண்டுவந்தது.

அதனைத் தொடர்ந்து ஒடிசா வட்டாரம் தாக்கப்பட்டது. அங்குள்ள மூன்று துறைமுகங்கள் உக்ரைனுக்காகச் செயற்பட்டுவந்தன.

இனிமேல் அந்தப் பகுதியில் செல்லும் உக்ரைனியக் கப்பல்கள் குறிவைக்கப்படும் என்று மொஸ்கோ எச்சரிக்கை விடுத்தது.

உக்ரைனின் மேற்கத்தியப் பங்காளித்துவ நாடுகள், ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளன.

உலகின் ஆக ஏழ்மையான மக்களை இந்நிலவரம் பாதிக்கும், உக்ரைனிய தானியங்களை அவர்களுக்குக் கொடுக்கும் வாய்ப்பை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் பறித்துக் கொண்டதாக ஜேர்மனிய வெளியுறவு அமைச்சர் கூறினார்.

உணவுப் பாதுகாப்பில் ரஷ்யா பொறுப்பின்றிச் செயற்படுவதாக பிரெஞ்சு வெளியுறவு அமைச்சும் குறைகூறியது. (நி-5)

# எரிமலைவெடிப்பைபோல தோன்றிய பெரிய மின்னல்

(மெக்சிகோ)

மெக்சிகோ நாட்டிற்கு தெற்கே உள்ள மத்திய அமெரிக்க நாட்டில் guatemala. இது எரிமலைகள், மழைக் காடுகள் மற்றும் பண்டைய மாயன் கலாச்சாரத்தின் தாயகமாக கருதப்படுகிறது. இந் நாட்டில் உள்ள ஒரு எரிமலைக்கு அருகே தோன் றிய பெரிய மின்னலை காட் டும் அற்புதமான வீடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோ ஜூலை 10 ஆம் திகதி படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த எரிமலையின் உயரம் 12,340 அடியாகும். வீடியோவில் இந்த மின்னல் தாக்குதல், அதன் மேலே உள்ள முழு வானத்தையே ஒளிரச் செய்வது போல் தோன்றுகிறது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் அமுத விழா - ஓர் சமூகப்பார்வை



ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த இளவாலையில் 'பசிப்பிணி போக்கும் ஏராளர் மலிந்த எழில் மிகு சிற்றூராய்த் திகழ்வது சித்திர மேழி எனும் பழம் பதியாகும். இது சீரும் திருவும் நிறைந்து செந்தமிழ்ச் சொல் பெற்றுயர்ந்த திருவூர். அத்திருவூரில் முருகன் நாமந் தாங்கி பழனியானந்தன் சனசமூக நிலையம் 1943 ஆம் ஆண்டு வித்தாகி ஓங்கி வளர்ந்து பெருவிருட்சமாகி நல்மணம் பரப்பி இன்னிழல் தந்து அகவை எண்பது கண்டு அக மகிழ்கிறது. கொண்டாடி மகிழ்ந்திட ஊரே திரண்டது. புலம் பெயர் உறவுகளும் ஓடோடி வந்தன. ஊரே விழாக் கோலம் பூண்டது.

**"நின்னெழில் விழியருள் காண்பதற்கு**
**எங்கள் நெஞ்சத்து ஆவலை நீயறியாயோ."**

என்ற பாரதியின் வாக்கை



மெய்ப்பிக்கும் வகையில் எம் ஊர் உறவுகள் ஒன்று பட்டெழுந்தன. இளைஞர்கள், யுவதிகள் வீதிக்கு வந்தனர். வானமும் இடையிடையே அழுது நின்றது. "அமுதவிழா தடைப்பட்டு விடுமோ!" என்று அனைவரும் ஏங்கினர். ஞானவைரவப் பெருமானின் கிருபை கார்முகிலைக் கலைத்து நின்றது. "மேழிச் செல்வம் மேன்மை பெறும்" எனும் மகுடத்தை அணி செய்து நிற்கும் பெருமை மிகு சனசமூக நிலையத்தின் பெரு விழா திட்டமிட்ட படி 07.05.2023 மாலை 3.00 மணிக்கு தலைவர் மு.நிறஞ்சன் தலைமையில் ஆரம்பமாகியது.

விருந்தினர்களை வரவேற்கும் அற்புத நிகழ்வு ஆனந்தமாய் அரங்கேறியது. மாலை அணிவித்து கௌரவப்படுத்தி அன்பையும் பண்பையும் முதலில் பறை சாற்றினர். "மீண்டும் கிராமத்திற்குள் போகிறோம்" என்ற உணர்வை விருந்தினருக்கு அளித்திட எண்ணிய விழாக் குழுவினரின் வரவேற்புப் பாணி தனித்துவமாய் மிளிரக் கண்டோம். "ஏர் முனைக்கு நிகர் இங்கு எதுவுமேயில்லை" என்ற கர்வமிகு காளைகள் பூட்டிய வண்டிகள் ஒரு புறம், குதிரை பூட்டிய வண்டில் இன்னொரு புறம் அணி செய்து நிற்க விருந்தினர்கள் வண்டிகளில் ஏற்றப்பட்டு சக்கரங்கள் மெதுவாய் உருள விருந்தினர் மனங்களும் களிப்புற காளைகள் கம்பீரமாய் இழுத்துச் செல்லும் காட்சி காண ஆயிரம் கண் வேண்டும். அதுவேயன்றி யா/யூனியன் கல்லூரியின் இன்னியக் குழுவின் இனிய இசை காதுகளில் தேனாய்ப் பாய ஊரவர், அயலவர் என அனைவரும் புடைசூழ அழைத்து வந்த காட்சி பசுமையாய் நீள்கிறது. மேழியூர் சந்தியிலும் மேலுமோர் அற்புதம் ஆனந்தமாய் அரங்கேறியது. ஆரத்தி எடுத்து அகமும் முகமும் மலர வரவேற்கும் நம் பண்பாடு இன்னும் நம்மோடு உறவாடி நிற்கிறது என்பதை நினைவூட்டி நின்றமை நிழலாய் விரிகிறது. தொடர்ந்து நடைபவனி ஞானவைரவப் பெருமானின் சந்நிதியை எட்டியது. விசேட பூசையில் அனைவரும் கலந்து அவன் தாள் பணிந்து நின்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாய் இனிக்கிறது. அக இருள் போக்கி அருளொளி எங்கும் பரவிட விழா மண்டபம் தயாராகியது. மங்கல இசை முழங்க அணி செய் விருந்தினர் மங்கல ஒளியேற்றி நிகழ்வை மங்கலகரமாக ஆரம்பித்து வைக்கும் இனிய பொழுது இன்பமாய்க் கழிய அனைவரும் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை பாடிப் பரவுங் காலம் கனிந்தது. மேழியூர் மழலைகளின் பண்ணார் மொழிகேட்டு பரமனும் அருள் கூர்ந்தான் என்றே எண்ணும் அளவிற்கு தேவார பாராயணமும் சிறப்பாய் அமைய இறையாசி பெற்ற மகிழ்வோடு சனசமூக நிலைய கீதம் பிருந்தாவன இராகத்தில் இசைக்க அனைவரும் எழுந்து



நின்று நிசப்தம் நிலவ மதிப்பளித்து நின்றமை நெஞ்சார்ந்த காட்சியாக இனிக்கிறது.

தலைவர் முருகையா நிறஞ்சன் தலைமையில் ஆரம்பமாகிய அமுதவிழா நிகழ்வில் "முகமலர்ந்து இன்சொலன் ஆதலே முதலில் வேண்டப்படுவது" எனும் வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாய் மேழியூர் சிறுமிகளின் வருக வருகவென இரு கரம் கூப்பி வரவேற்கும் இனிய நடனம் தீந்தமிழாய்த் தித்தித்தது என்றால் மிகையாகாது.

"ஒக்கந்திருந்தி உலகோர் - நலம் உற்றிடும் வண்ணம்



உழைப்பவன் யோகி ஊருக்கு உழைத்திடல் யோகம்" எனும் பாரதியின் அருள் வாக்கை மெய்ப்பிக்கும் மேழியூரான் பொது வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜாவின் இனிய வரவேற்புரை அவர் தம் பணிவையும் கனிவையும் பறைசாற்றி நிற்கின்றதென்றே விருந்தினர் உட்பட யாவரும் விதந்து பேசியமை இளஞ்சிறார்களுக்கு ஓர் முன்னுதாரணமாய் அமைந்ததென்றே கூற வேண்டும். தொடர்ந்து பழனியானந்தன் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழாவும் பெயர்ப்பலகை திரை நீக்கமும் இடம்பெற்றன. பிரதம விருந்தினர் சு.முரளிதரனின் அழகிய கரங்களால் அரங்கேறியது. இம் மண்டபம் வாழ்நாள் பேராசிரியர் வைத்திய கலாநிதி க.பாலசுப்பிரமணியத்தின் நாமம் பொறிக்கப்பட்டு கம்பீரமாய் காட்சியளிக்கிறது. தொடர்ந்து வரலாற்றுச் சுவடாய் அமைந்த அமுத மலர் வெளியீடுஇனிதேஆரம்பமாகியது. இம் மலரினை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைத்து முதற் பிரதியை அவர் தம் திருக்கரங்களால் வழங்கி பெருமையுறச் செய்து நின்றார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை விருந்தினர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தனர். நூல் ஆய்வுரை மேழியூரான் இ.தேவராசா மேற்கொண்டிருந்தார். இம் மலரானது வண்ண மலராக அச்சிடப்பட்டுள்ளது. அதிலுள்ள ஒவ்வொரு தேன் துளிகளும் நம் வாழ்விற்கு உரமூட்டுவன. தொடர்ந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேற் பெற்ற மேழியூர் மாணவர்களுக்கும் க.பொ.த (சா/தர), உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மேழியூர் மாணவர்களுக்கும் வெற்றிக் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இனிதே நிறைவேறியது. அக் கேடயங்கள் ஒவ்வொன்றும் 80 ஆண்டு விழாவை நினைவூட்டும் ஞாபகச் சின்னமாக அமைந்திருந்தமையும் பாராட்டத்தக்கது.

இடையிடையே கண்களுக்கும் செவிகளுக்கும் விருந்தளிக்கின்ற வகையில் கலை நிகழ்வுகளும் மேழியூர் மாணவர்களால் அழகாக ஆற்றுகை செய்யப்பட்டுக் கொண்டிருந்த காட்சியும் நேர முகாமைத்துவத்தைக் எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருந்தது.

அமுத விழவை முன்னிட்டு நாடத்தப்பட்ட வீதியோட்டம், சைக்கிளோட்டம் மற்றும் கிராமத்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இடையிடையே வழங்கி வெற்றி பெற்றவர்கள் ஊக்குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தமை பலரது கவனத்தையும் ஈர்த்து நின்றது எனலாம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த அதிபர் ந.விஜயசுந்தரத்தின் சிறப்புரை சிந்திக்கவும் மனங் கொள்ளவும் செய்து நின்றமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து இந் நிகழ்வு முழுவதையும் நன்கு பார்த்து இரசித்த பெருமதிப்பிற்குரிய யாழ்.மாவட்ட மேலதிக செயலர் சு.முரளிதரனின் முதன்மை விருந்தினர் உரை இனிதாய் காதுகளில் தேனாய்ப் பாய்ந்தது. அவர் எமது சனசமூக நிலைய இளைஞர்களின் அர்ப்பணிப்பான சேவையை மிகவும் பாராட்டிப் பேசியிருந்தார். அதுவேயன்றி அன்றைய பதின்ம வயதினரின் மனதைப் பற்றியும் அறிவுரை வழங்கியிருந்தார். விருந்தினர்கள் அனைவருக்கும் ஞாபகார்த்தச் சின்னம் வழங்கிய கௌரவமளித்த இளைஞர்களின் பண்பு பலரையும் ஈர்த்து நின்றமையும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து கலை நிகழ்வுகளும், சாரங்கா இசைக்குழுவினரின் விசேட இசை நிகழ்வும் இடம் பெற்றது. கு.லக்ஷனின் நன்றியுரையுடன் அமுத விழா இனிதே நிறைவெய்தியது.

இவ்விழாவானது எதிர்கால சந்ததியினருக்கு சனசமூக நிலைய வரலாற்றினை பறைசாற்றும் வகையில் பொறுப்புக்களைக் கையளிக்கும் இனிய நிகழ்வாக அமைந்து இன்பம் பயப்பதாக அமைந்தது மட்டுமன்றி ஒற்றுமையே பலம் என்பதையும் மெய்ப்பிப்பதாய் அமைந்தது.

"மேழிச் செல்வம் மேன்மை பெறும்"

**த.தயானந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் பணிக்கான அலுவலர் கணக்கெடுப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள இ.தரவு பத்திரத்தை பூரணப்படுத்தல் தொடர்பான முன்னோடி செயலமர்வு நேற்று இடம் பெற்றது. (படம்: யதுபாஸ்கரன்)

# முழங்காவில் மதுபான சாலையை திறக்க நிரந்தர தடையுத்தரவு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட முழங்காவில் பகுதியில் அமைக்கப்பட்ட மதுபான சாலையை திறப்பதற்கு நிரந்தர தடையுத்தரவை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட முழங்காவில் பகுதியில் முழங்காவில் விநாயகர் ஆலயம் ,பாடசாலை ஆசிரியர் விடுதி ,பொது விளையாட்டு மைதானம் ஆகிய வற்றின் மையப் பகுதியில் மதுபானசாலையொன்று அமைக்கப்பட்டு திறக்க முற்பட்ட சமயம் பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் பொதுத் தொல்லை ஏற்படுத்துவதாக தெரிவித்து முழங்காவில் பொலிஸ் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் ஒன்று செய்யப்பட்டிருந்தது குறித்த வழக்கானது கடந்த 6 ஆம் திகதி விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொது அமைப்புகள் மற்றும் முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சட்டத்தரணி எஸ். விஜயராணி உள்ளிட்டோர் முன்னிலையாகியதுடன் பூநகரி பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தரும் முன்னிலையாகி குறித்த பிரதேசத்தில் இருக்கின்ற பாடசாலை மற்றும் அருகில் இருக்கின்ற மிகப் பழமையான ஆலயம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இது அமைந்திருப்பதனால் இதனை திறப்பதற்கு தடை உத்தரவு ஒன்றினை பிறப்பிக்குமாறு விண்ணப்பம் செய்யப்பட்டதை அடுத்து மேற்படி விடயங்களை கருத்தில் எடுத்து நேற்று வரை அதனை திறப்பதற்கெதிரான இடைக்கால தடையுத்தரவு ஒன்றினை பிறப்பித்திருந்தது.

இது தொடர்பான வழக்கு நேற்றைய தினம் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த மதுபானசாலைக்கான அனுமதி சுற்றலாத்துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் வழங்கப்பட்டாலும் குறித்த மதுபானசாலை அமைந்துள்ள சூழல் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்த மன்று அதனை திறப்பதற்கெதிரான நிரந்தர தடையுத்தரவினை பிறப்பித்துள்ளது. (4-5-315)

# தனியார் பேருந்து சாரதி, நடத்துநர் மீது தாக்குதல்

## மானிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் , மானிப்பாய் - காரைநகர் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தின் மீதும், அதன் சாரதி மற்றும் நடத்துநர் மீதும் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த பேருந்து காரைநகர் மானிப்பாய் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை பேருந்தினை வழி மறித்த இனம் தெரியாத குழு வொன்று பேருந்தின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி, சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் காரைநகர் சிற்றூர்தி சங்கத்திற்கு அறிவித்துள்ளனர். அத்துடன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (4-5-33)

## வர்த்தக சந்தை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டு கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் குட்டிச் சுட்டி முன்பள்ளி, அகம் குழந்தைகள் பகல் நேரக் காப்பக மாணவர்களின் வர்த்தக சந்தை நாளைமறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் சந்தி கடைத்தொகுதியில் து.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-5)

# மாஞ்சோலை வைத்தியசாலையில் இதய சிகிச்சை பிரிவு திறப்பு



(முல்லைத்தீவு)

புலம் பெயர்ந்து கனடாவில் வசிக்கும் செந்தில் குமரனினால் முன்னெடுத்து செல்லப்படும் செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினால் சென்ற வருட இறுதியில் "கனடா மல்லாவி" இரத்த சுத்திகரிப்பு நிலையமும் இந்த ஆண்டு தொடக்கத்தில் மாஞ்சோலை மருத்துவமனையில் "டொரோண்டோ முல்லை" இரத்த சுத்திகரிப்பு நிலையமும் அமைத்து முல்லைத்தீவு மக்களின் பாவனைக்காக வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக மாஞ்சோலை மருத்துவமனைக்கு மேலுமொரு வரப்பிரசாதமாக "மார்க்கம் முல்லை" இதய நோய் சிகிச்சை பிரிவு அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் சிரேஸ்ர இருதய சிகிச்சை நிபுணர் எம் குருபரன் மற்றும் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள்,பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (4-5)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு நெல்லியடியில் அவரது உருவச்சிலைக்கு குடும்ப உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (படங்கள்: மகாலிங்கம்)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

அருட்சகோதரி

வேஜினியா வோல்டர் (தி.சி)

B.B.M,M.B.A

20.07.2023 வியாழக்கிழமை அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலை ஆசிரியையான அருட்சகோதரி வேஜினியா வோல்டர் (தி.சி) அவர்கள் வியாபார நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.

(16355)


# வவுனியாவில் புகையிரதம் மாட்டுடன் மோதி விபத்து

(குருமன்காடு)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற கடுகதி புகையிரதம் தாண்டிக்குளம் பகுதியில் நேற்று மாலை மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது மாடு பலியான நிலையில் புகையிரதத்தின் இயந்திரப்பகுதியில் விபத்தினால் ஏற்பட்ட கோளாறு காரணமாக புகையிரதம் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனை மீள இயங்க வைப்பதற்கு பல்வகையிலும் புகையிரத ஊழியர்கள் முயற்சித்த போதிலும் அது சாத்தியப்படாத நிலையில் புகையிரதம் தாண்டிக்குளத்திலேயே தரித்து நின்றது.

பல மணி நேரமாகியும் புகையிரதம் பயணத்தினை தொடராத நிலையில் பயணிகள் ஏ-9 வீதியில் சென்ற பேருந்தில் தமது பயணத்தினை தொடர்ந்தனர்.

மாலை 5.40 மணியளவில் விபத்து ஏற்பட்ட நிலையில் இரவு 9.30 மணியளவில் பிறிதொரு புகையிரத இயந்திரம் வருகை தந்து குறித்த புகையிரதத்தினை இழுந்து சென்றது. (4-5-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2023 - 17.08.2023

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

# வெளிநாட்டு முயற்சியில் அனுகூலமுண்டு!



**எவரிடத்திலும் எளிதாகப் பழகும் துலாம் இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்கிரன், தனாதிபதி செவ்வாயோடு இணைந்து லாப ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். குரு பார்வையும் உங்கள் ராசியில் பதிகின்றது. எனவே பொருளாதாரத்தில் மேம்பாடு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தேடி வந்த வரனால் திருமண முயற்சி கைகூடும். செய்தொழிலில் லாபம் திருப்திகரமாக இருக்கும். மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுப கிரகமான குரு பகவான், இப்பொழுது மேஷ இராசியில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசியைப் பார்ப்பதோடு, சகோதர ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

கேதுவின் பார்வையும், சகோதர ஸ்தானத்தில் பதிகிறது. எனவே உடன்பிறப்புகளோடு ஒரு ஆன்மிகப் பயணத்தை மேற்கொள்வீர்கள். உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகவான் பகை கிரகமாக இருந்தாலும் குருவின் பார்வைக்கு பலன் உண்டு. எனவே அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும். காலாவதியாகிப் போன கடன்கள் வசூலாகும். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் உண்டு. வாகனங்கள் வாங்கி மகிழ வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். குருவின் பார்வை பலத்தால் சகோதர ஸ்தானம் மற்றும் லாபஸ்தானம் புனிதமடைவதால் உடன் பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர்.

தொழிலுக்கான மூலதனங்களை நீங்கள் போட்டு, அதை நிர்வகிக்கும் பொறுப்பை சகோதர வர்க்கத்தினர் கையில் ஒப்படைப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். பூமிப் பிரச்சினை சுமுகமாக முடியும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். வெளிநாட்டில் வசிக்கும் நண்பர்கள் உங்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முன்வருவர்.




**சிம்ம - புதன் ஆடி**

7 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பாக்கிய ஸ்தானத்திற்கும், விரய ஸ்தானத்திற்கும் அதிபதியானவர் புதன். விரயாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது, விரயத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரியத்தைச் செய்ய நினைத்தாலும் பணத்தை வைத்துக்கொண்டு செய்யவேண்டியதில்லை. காரியத்தை தொடங்கிவிட்டால் பணப் புழக்கம் தானாகவே வந்து சேரும். பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

ஒரு சிலருக்கு பழைய தொழிலைக் கொடுத்து விட்டு புதிய தொழில் தொடங்கலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நிதி உதவி கிடைத்து தொழிலை விரிவு செய்யும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகள் பக்கபலமாக இருப்பர். கலைஞர்களுக்கு கௌரவம், புகழ் கூடும். மாணவ - மாணவிகள், போட்டிக்கு மத்தியில் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். பெண்களுக்கு, தங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

அருகில் இருப்பவர்களின் ஆதரவு உண்டு. இல்லத்தில் சுபகாரியங்கள் இனிதே நடைபெறும்.

# கொடுக்கல்-வாங்கல்கள் சுமுகமாக நடைபெறும்!



**வெற்றியை குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், சுக்கிரனோடு இணைந்து தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவர் மீது குரு பகவானின் பார்வை பதிகின்றது. எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். அர்த்தாஷ்டமச் சனியும் வக்கிர நிலையில் இருப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்தோடு பணிபுரிந்து உன்னத வளர்ச்சியைக் காண்பீர்கள். பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுபகிரகமான குரு பகவான், இப்பொழுது மேஷ இராசியில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால், அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றப் போகின்றது. குறிப்பாக தன ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால், தனவரவு தாராளமாக வந்து சேரும். குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் - வாங்கல் சுமுகமாக நடைபெறும். குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் வருமானத்தால் பொருளாதார நிலை உயரும். நல்ல காரியங்கள் பலவும் நடைபெற நண்பர்கள் வழிகாட்டுவர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். குருவின் பார்வை 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால், தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். அதன் மூலமாக உங்களின் பொருளாதார நிலை உயர வழிபிறக்கும். தொழிலுக்கான கூடுதல் முதலீடுகள் செய்ய, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். அரசியல் பிரமுகர்களும், அதிகார வர்க்கத்தினரும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். கலைத்துறையில் உள்ளவர்கள் கவுரவிக்கப்படுவர். புண்ணிய காரியங்களுக்கு பொருள் உதவி செய்வதன் மூலம் உங்களுக்கு புகழ் வந்து சேரும். எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேற நண்பர்களும், உறவினர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர். பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழன் தோறும் விரதமிருந்து குரு கவசம் பாடி குரு பகவானை வழிபடுவது நல்லது.




**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். லாபாதிபதி புதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம், ஒரு அற்புதமான நேரமாகும். தொழிலில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்படும். கிளைத்தொழில் தொடங்கும் யோகமும் உண்டு. வெளிநாட்டில் இருந்தும், உள்நாட்டில் இருந்தும் அடுக்கடுக்காக ஒப்பந்தங்கள் வந்துசேரும். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் கைகூடும். முக்கியப் பிரமுகர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். பிள்ளைகளால் பெருமை சேரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு லாபம் இருமடங்காக உயரும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலிடத்து ஆதரவு உண்டு. கலைஞர்களுக்கு கௌரவம், அந்தஸ்து உயரும். மாணவ - மாணவிகளுக்கு மதிப்பெண் கூடுதலாகக் கிடைக்கும். பெண்களுக்கு நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நாகரீகப் பொருட்கள் வாங்குவதில் அக்கறை கூடும். கணவன் - மனைவிக்குள் கனிவும், பாசமும் அதிகரிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 235





இலங்கையில் உன் தம்பி அருள்மொழி தோல்வி அடைய வேண்டும். அதனால் அவனுக்கு அவமானம் நேர வேண்டும். இங்கே உனக்கு உன் தம்பியின் பேரில் கோபம் ஏற்பட வேண்டும். நீங்கள் இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும். அதைப் பார்த்து இந்தக் கிழவன் வேதனைப் படவேண்டும்! இதுதான் அவர்களுடைய அந்தரங்க நோக்கம்..." என்று மிலாடுடையார் ஆத்திரத்துடன் சொல்லி வருகையில் கரிகாலன் குறுக்கிட்டான்.

"இந்த நோக்கத்தில் அவர்கள் ஒரு நாளும் வெற்றி அடையப் போவதில்லை, தாத்தா! என் தம்பியையும் என்னையும் யாராகிலும் பிரிக்க முடியாது. அருள்மொழிக்காக நான் உயிரையும் விடுவேன். எனக்கு ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது. கப்பல் ஏறி நானும் இலங்கைக்குப் போகலாமா என்று. அங்கே அவன் என்ன கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறானோ என்னமோ! நான் இங்கே சுகமாக உண்டு உடுத்து அரண்மனையில் தூங்கிக் கொண்டு காலங்கழிக்கிறேன். என் வாளும் வேலும் துருப்பிடித்துப் போகின்றன. ஒவ்வொரு கணமும் எனக்கு ஒரு யுகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. தாத்தா! சொல்லுங்கள்! இந்தப் பண்டங்கள் ஏற்றும் கப்பல்களில் ஒன்றில் ஏறி நானும் இலங்கைக்குப் போகட்டுமா?" என்று கேட்டான் கரிகாலன்.

"அரசே! அருமையான யோசனை! பல நாளாக நான் நினைத்துக் கொண்டிருந்ததைத் தாங்களும் சொல்லுகிறீர்கள். புறப்படலாம், வாருங்கள்! இதற்குத் தாத்தாவை யோசனை கேட்பதில் பயனில்லை. இவரைக் கேட்டால் 'வேண்டாம் பொறு!' என்றுதான் புத்திமதி சொல்லுவார்! நாளைக்கே நாம் புறப்படலாம். தொண்டை மண்டலப் படையில் பாதியை அழைத்துக் கொண்டு போகலாம். இலங்கை யுத்தத்தை ஒரு வழியாக முடித்துக் கொண்டு நேரே நாகப்பட்டினத்தில் வந்து இறங்கலாம். இறங்கித் தஞ்சாவூருக்குச் சென்று அந்தப் பழுவேட்டரையர்களை ஒரு கை பார்த்து விடலாம்!" என்று பார்த்திபேந்திரன் பொறித்துக் கொட்டினான்.

"கரிகாலா! பார்த்தாயா? நான் முதலிலேயே என்ன சொன்னேன்? இவன் வாயை மூடிக் கொண்டிருந்தால் தான் நான் பேசுவேன் என்று சொல்லவில்லையா?"


"இதோ வாயை மூடிக் கொள்கிறேன், தாத்தா! நீங்கள் சொல்வதையெல்லாம் சொல்லி முடியுங்கள்!" என்று பார்த்திபேந்திரன் வாயைக் கையினால் பொத்திக் கொண்டான்.

"கரிகாலா! நீ வீராதி வீரன். உன்னைப் போன்ற பராக்கிரமசாலி இந்த வீரத் தமிழகத்திலே கூட அதிகம் பேர் பிறந்ததில்லை. என்னுடைய எண்பது பிராயத்துக்குள் நானும் எத்தனையோ பெரிய யுத்த களங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் எதிரிகளின் கூட்டத்தில் தன்னந்தனியே புகுந்து சென்று உன்னைப் போல் சண்டையிட்ட இன்னொரு வீரனைப் பார்த்ததில்லை. சேவூர்ப் பெரும் போர் நடந்தபோது உனக்குப் பிராயம் பதினாறு கூட ஆகவில்லை.

அந்த வயதில் பகைவர்களின் கூட்டத்தில் நீ புகுந்து சென்ற வேகத்தையும், இடசாரி வலசாரியாக வாள் சுழன்ற வேகத்தையும், பகைவர்களின் தலைகள் உருண்ட வேகத்தையும் போல் நான் என்றும் பார்த்ததில்லை. இன்னும் என் கண் முன்னால் அந்தக் காட்சி நின்று கொண்டிருக்கிறது. உன்னைப் போலவே உன் சிநேகிதன் பார்த்திபேந்திரனும் வீராதி வீரன்தான்.

ஆனால் நீங்கள் இரண்டு பேரும் பதற்றக்காரர்கள் முன்கோபம் உள்ளவர்கள். அதனால் உங்களுக்கு யோசிக்கும் சக்தி குறைந்து விடுகிறது. எது செய்ய வேண்டுமோ அதற்கு நேர்மாறான காரியத்தைச் செய்யத் தோன்றி விடுகிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறந்த மனிதன் யார்?



நாட்டை ஆளும் அரசன் ஒருவனிடத்தில், அந்த நாட்டின் சிற்பி நான்கு பொம்மைகளை கொண்டு வந்து தருகிறார்.

அரசன் கோபமாக "நான் என்ன சின்னக் குழந்தையா? " இதை வைத்து விளையாடுவதற்கு என்றுக் கேட்கிறார்.

சிற்பி "இல்லை அரசே, இது நம் வருங்கால ராஜாவுக்கு அதாவது நம் இளவரசருக்கு" என்கிறார்.

இந்த பொம்மைகளில் சில விசேஷங்கள் உண்டு. நான்கு பொம்மைகளின் ஒரு பக்க காதிலும் ஓட்டை இருக்கிறது பாருங்கள் என்கிறார்.

அரசன் "இதில் என்ன விஷயம் இருக்கிறது" என்கிறார்.

முதல் பொம்மையை அரசனிடம் கொடுக்கிறார் சிற்பி. கூடவே ஒரு மெல்லிய சங்கிலியையும் கொடுத்து அதன் காதில் இருக்கும் ஓட்டையில் விடச் சொல்கிறார்.

சங்கிலி மறுப்பக்க காதின் வழியே வருகிறது.

சிற்பி "மனிதர்களில் சிலர் நாம் எதைச் சொன்னாலும் இப்படித் தான் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதின் வழியே அனுப்பி விடுவார்கள்" என்கிறார்.

இரண்டாவது பொம்மையை கொடுத்து அதையே திருப்பிச் செய்யச் சொல்கிறார்.

இந்த பொம்மையில் சங்கிலி வாய் வழியே வருகிறது.

இந்த மாதிரி மனிதர்கள் எதை சொன்னாலும் அதை அடுத்த நொடி வெளியே விட்டு பரப்பிவிடுவார்கள் என்கிறார்.

பிறகு, மூன்றாவது பொம்மையை கொடுத்து மீண்டும் அதையே செய்யச் சொல்கிறார்.

இதில் சங்கிலி வெளியே வரவே இல்லை.

சிற்பி, இவர்களிடம் எதைச் சொன்னாலும் உள்ளேயே தான் இருக்கும். வெளியே வராது என்கிறார்.

அப்போது இதில் "யார் தான் சிறந்த மனிதர் என்று" அரசன் கேட்கிறார்.

என் கையில் இருக்கும் இந்த நான்காவது பொம்மை தான் சிறந்த மனிதன் என்று சிற்பி சொல்கிறார்.

அரசன் பொம்மையின் காதின் வழியே சங்கிலியை விடுகிறார். மறுபக்க காதின் வழியே வெளிவருகிறது. சிற்பி மீண்டும் செய்ய சொல்கிறார். இரண்டாம் முறை வாயின் வழியே சங்கிலி வருகிறது. மூன்றாம் முறை வரவே இல்லை.

சிற்பி "நான்காவது பொம்மை போன்ற மனிதர்கள் தான் நம் பகமானவர்கள்". அவர்களை முழுமையாய் நம்பலாம். எங்கு பேச வேண்டுமோ அங்கு பேசி, ,

எங்கு கேட்க வேண்டுமோ அங்கு கேட்டு, எங்கு அமைதி காக்க வேண்டுமோ அங்கு அமைதி காப்பார்கள் என்று விளக்கம் கூறினார்.

நீதி : நாம் நான்காவது பொம்மையைப் போல் இருக்க வேண்டும். மற்ற மூன்று பொம்மைகளை போல் இருப்பவர்களையும் ஏற்றுக் கொண்டு சகித்துப் போக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்களையும் நம்ப முடியாது! இவர்களையும் நம்ப முடியாது!

சிங்கள ஆட்சியாளர்களும் பேரினவாதிகளும் மட்டும் நமக்கு எதிரானவர்கள் அல்ல. மாறாக, நம் தமிழ் அரசியல் தரப்புகளும் நமக்கு எதிரானவை என்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

உண்மை. சிங்களத் தலைவர்கள் ஒரு போதும் நமக்கு உரிமை தரமாட்டார்கள்.

அவர்கள் உரிமை தருவதுபோல நடித்து காலத்தைக் கடத்தி தங்களின் ஆட்சிக் காலத்தை நிறைவுபடுத்துவரேயன்றி, மற்றும்படி அவர்கள் மிக மோசமான இனவாதிகள்.

ஆட்சியில் இருப்பதற்காக நடிக்கிறார்கள்.

இப்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க ஒரு காலத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் வைத்து தீ மூட்டினார்.

தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கக்கூடாது என்ற கோதாவில் அவர் அவ்வாறு செயற்பட்டார்.

ஆம், சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் வைத்து தீ மூட்டி எரித்த ஒருவரால், எங்ஙனம் வடக்கு கிழக்கை இணைக்கவும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை வழங்கவும் முடியும்.

ஆக, நாடு கந்தறுந்து கிடக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாக இருந்தால், அதற்கு சர்வதேசத்தின் ஆதரவு கட்டாயம் தேவை. அதேபோல் புலம்பெயர் தமிழர்களின் நிதி முதலீடும் அவசியம்.

எனவே மேற்குறித்த சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதற்கும் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை வரவழைப்பதற்குமான ஒரே அஸ்திரம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுபோல பாசாங்கு செய்வதுதான்.

ஆம், இப்போது இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முக்கியமல்ல.

மாறாக, இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு முயற்சி செய்வதுபோல காட்டிக் கொள்வதே முக்கியம்.

அவ்வாறான ஏற்பாட்டில்தான் தமிழ் அரசியல் தரப்புகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்பு நடந்தாகிறது.

இந்தச் சந்திப்பு எந்தவித பயனுமற்றதென்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமல்ல. அந்தச் சந்திப்பில் பங்குபற்றிய அத்தனை தமிழ் அரசியல்வாதிகளுக்கும் நன்கு தெரியும்.

இதை நாம் கூறும்போது அப்படியானால், எதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் தமிழ்த் தரப்புகள் பங்கேற்க வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

இங்குதான் நம்மவர்களும் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக, அடுத்தமுறையும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைப்பதற்காக நடிக்கின்றார்கள்.

இதுதான் உண்மை. ஆக அவர்களை எப்படி நம்ப முடியாதோ. அதுபோல இவர்களையும் நாம் நம்ப முடியாது. இதுவே உண்மை. என்ன செய்வது. ஒரு தரப்பு அதீத தமிழினப் பற்றுதலாலும் இன்னொரு தரப்பு எதிர்கால அரசியல் பதவிக்காகவும் அரசியல் நாடகத்தில் பாத்திரமேற்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

# வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட வடக்கு-கிழக்கிலுள்ள மக்களின் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்

### அமைச்சர் பவித்திரா உறுதியளிப்பு

(கொழும்பு)

வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட வடக்கு-கிழக்கிலுள்ள மக்களின் காணிகள் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்த தன் பின்னர் அவை நிச்சயம் விடுக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி உறுதியளித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

1980 ஆம் ஆண்டுகளின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பாலான மக்கள் தமக்கு உரிமமுடைய காணிகளை கைவிட்டுச் சென்றுள்ளனர். அதன் பின்னர் 30 ஆண்டுகளின் பின்னர் இவை காடுகளாகியுள்ளன.

இவற்றில் தொடர்ந்தும் வன வள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் வைத்திருக்க வேண்டிய காணிகளும் உள்ளன. மேலும் பல காணிகள் உண்மையில் 1985 இல் உரிமம் காணப்பட்ட மக்களின் இடங்களாகும்.

எனவே யுத்தம் காரணமாக தம்மால் கைவிட்டுச் செல்லப் பட்ட தமது முதாதையரின் காணிகளை விடுவிக்குமாறு அந்த மக்களால் விடுக்கப்படும் கோரிக்கைகள் நியாயமானவை யாகும். எவ்வாறிருப்பினும் அவை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நீதிமன்றத் தில் வழக்குகள் நிலுவையிலுள்ளன. எனவே இது தொடர்பில் விரிவான தகவல்களை வெளிப்படுத்த முடியாது. எவ்வாறிருப்பினும் மக்களுக்குரிய காணிகள் நிச்சயம் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். அரசாங்கமும் அதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளதுஎன அவர் தெரிவித்தார். (நி-5)

## கட்டுப்படுத்தப்பட்ட தொற்று நோய்கள் மீண்டும் பரவல் - ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

கட்டுப்படுத்தப்பட்ட ஆறு தொற்றுநோய்களில்மூன்று தொற்று நோய்கள் மீண்டும் சமூகத்தில் பரவி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலேரியா, பரவா மற்றும் தட்டம்மை (சரம்ப) ஆகியவை சமூகத்தால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும், ஆனால் அந்த தொற்று நோய்கள் மீண்டும் பதிவாகி வருவதாகவும் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார். (நி-5)

## சகோதரியின் நகைகளை திருடிய சகோதரன் கைது யாழில் சம்பவம்

யாழில் சகோதரியின் நகைகளை திருடிய சகோதரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் தான் வீட்டில் இல்லாத வேளை, வீட்டில் இருந்த தனது நகைகள் களவாடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பெண்ணின் சகோதரனை சந்தேகத்தில் கைது செய்து, விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது, சகோதரியின் நகைகளை தான் களவாடியதை ஒப்புக் கொண்ட சகோதரன் அதனை அடகு வைத்து, 50 ஆயிரம் ரூபாய் பணம் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து அவரிடமிருந்து பணத்தினை பெற்றுக்கொண்ட பொலிஸார்அடகுவைக்கப்பட்ட நகைகளையும் மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்கு தொடர்ந்தும் பாதிப்பு

### பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு தொடர்ந்தும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு ஆசிரியர்கள் வருகை தராமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக விஞ்ஞான பாடத்திற்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை இரு கட்டங்களாக மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (நி-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** அகத்திமோட்டை, கூராய், கோவில்குளம், சீதுவிநாயகங்குளம், விடத்தற்தீவு-மருத்துவமனை, விடத்தற்தீவு-கிராமம் மகாறம்பைகுளம், சி.இ.சிகல் உடைக்கும் ஆலை, காத்தார் சின்னக்குளம் ஆலை, பிரசன்னா கல் உடைக்கும் ஆலை, மடுகந்த டெலிகாம் அளுத்வத்த, அட்டம்பகஸ்கட, போகஸ்வேவா, கருவேலப்புளியங்குளம், மாமடு வைத்தியசாலை, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மலையா பருத்திக்குளம், மல்மடுவா (மகாகச்சக்கொடிய) நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** இறால் [illegible] கோபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் நீண்டகாலமாக ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக உயிர் கொல்லி ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவரும் குற்றச்சாட்டில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த நபர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை சேர்ந்த 23 வயதுடைய சந்தேகநபர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவருவதாக கடந்த ஜுன் மாதம் பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், சந்தேகநபரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்த போது குருநகர் பகுதியில் இருந்து தப்பித்து தலைமறைவாகி இருந்தார்.

தலைமறைவாகி இருந்த போதிலும் போதைப் பொருள் விற்பனையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை குறித்தநபர் கோப்பாய் பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு உள்ளதாக யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் குழு சந்தேகநபரை கைது செய்தது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சோதனைக்கு உட்படுத்தியபோது விற்பனைக்காக வைத்திருந்த 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் சந்தேகநபருக்கு எதிராக போதைப்பொருள் கடத்தல், விற்பனை உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்களுக்கு கீழ் நீதிமன்றில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

21

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### குதிரையும் ஸ்வஸ்திகாவும் கொண்ட ஈய நாணயங்கள் (கி.மு 3 - கி.பி.1)


குதிரையும் ஸ்வஸ்திகாவும் கொண்ட ஈயநாணயங்கள் (கி.மு 3 - கி.பி.1) குதிரையும் ஸ்வஸ்திகாவும் கொண்ட ஈய நாணயங்கள் தென் கிழக்கு இலங்கையில் திஸ்மஹாராமவிற்கு அருகில் உள்ள அக்குருகொடவில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. இதில் குதிரை பின்வால் கீழும் மற்றும் முன் கால்கள் முன்னோக்கி நீட்டப்பட்டு வலப்புறமாக குதிப்பது போல் உள்ளது. சில பிராமி எழுத்துக்கள் மங்கலாகத் தெரிகின்றன.



குதிரையும் ஸ்வஸ்திகாவும் கொண்டஈயநாணயங்கள் (கி.மு 3 – கி.பி.1)

### மரமும்ஸ்வஸ்திகாவும் கொண்ட ஈயநாணயங்கள் (கி.மு 3-கி.பி.1)

அனுராதபுரம் மற்றும் ருகுணுவில் உள்ள பல்வேறு தொல்பொருள் தளங்களில் ஒரு வட்ட வடிவ மரமும் ஸ்வஸ்திகாவும் கொண்ட செப்பு-ஈய நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதன் முன்புறத்தில் பலகிளைகள் (நான்கு அல்லது ஆறு அல்லது எட்டு கிளைகள்) கொண்டமரம் பல (நான்கு அல்லது ஆறு அல்லது பன்னிரண்டு) பெட்டிகளுக்குள்ளும் பின்புறத்தில் வலது (வலதுபுறம்) அல்லது இடது (எதிர் திசையில்) சுழலும் ஸ்வஸ்திகாவும் உள்ளன.



மரமும் ஸ்வஸ்திகாவும் கொண்டநாணயங்கள் (கி.மு 3 – கி.பி.1)

### பிடரிமயிர் இல்லாத சிங்க நாணயக்குத்திகள்



பிடரிமயிர் இல்லாத சிங்கக் நாணயக் குத்திகள்

இந்த நாணயம் செப்பு உலோகத்திலிருந்தே தயாரிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் ஒரு பக்கத்தில் சிங்க உருவம் காணப்படுகின்றது. மறு பக்கத்தில் சிறிய மூன்று அல்லது நான்கு புள்ளிகள் காணப்படுகின்றன. மேற்படி புள்ளிகளின் மூலம் நாணயத்தின் பெறுமதி காட்டப்பட்டுள்ளதென கருதலாம். இந்த நாணயத்தின் விட்டம் ½ - ¾ அங்குலங்களுக் கிடையில் காணப்படுகின்றது. இந்நாணயம் கி.பி. 3 - 4 ஆம் நூற்றாண்டுகளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. அநுராதபுரம் அகழ்வுகளின்போதும் வடபகுதி அகழ்வுகளின் போதும் இந்த வகையைச் சேர்ந்த நாணயங்களைக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### லக்ஷ்மி பளிங்குக்கல் (கி.மு 3 - கி.பி.8)

கி.மு. 3 - கி.பி. 8 வது நூற்றாண்டு போன்றதொரு மிகப் பண்டைய காலத்திலேயே பெண்ணின் உருவத்துடன் கூடிய நாணயங்கள் முதற் தடவையாக இலங்கையில் சுற்றோட்டத்தில் காணப்பட்டன. நாணயங்களின் முகப்பில் காணப்படுகின்ற பெண் இலட்சுமியென்றே கருதப்படுகின்றது.

ஆதலால் இந்நாணயங்கள் இலட்சுமி தகடு நாணயம் என அழைக்கப்படுகின்றன.

லசஷ்மி பளிங்குக்கல்



படம்- cbsl gov lk

இந்த நாணயங்கள் இரண்டு விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அது வார்க்கப்பட்டதாகவும் மற்றும் செப்புத் தகட்டில் அச்சிடப்பட்ட விதத்திலுமாகும். நாணயம் பல்வேறு அளவுகளைக் கொண்டதாக காணப்படுகின்றது.

இதற்கமைய வார்க்கப்பட்ட வகையைச் சேர்ந்த நாணயத்தின் நீளம் 1¼ அங்குலமாகவும் அகலம் ½ அங்குலமாகவும் காணப்படுகின்றது. நாணய தயாரிப்பின்போது அண்ணளவாக 60 சதவீதம் ஈயமும் 15 சதவீதம் செப்பும் கலக்கப்பட்டுள்ளது.

மலர் மீது நிற்கும் இலட்சுமி, மலரின் இரு புறத்திலிருந்தும் எழுகின்ற இரண்டு தாமரைத் தண்டுகளை கைகளால் பிடித்துள்ள விதமும், தோள் வரை எழுந்துள்ள அந்த தாமரைத் தண்டுகளில் பூத்துள்ள இரண்டு தாமரை மலர்களின் மீது தும்பிக்கைகளால் தண்ணீர் குடமொன்று வீதம் ஏந்தியுள்ள இரண்டு யானைகள் அவளை தண்ணீரால் நீராட்டுகின்ற விதமும் காட்டப்பட்டுள்ளது.

இந்த வகையைச் சேர்ந்த சில நாணயங்களில் இலட்சுமி தாமரை மலரின் மீது அமர்ந்துள்ள விதமே காணப்படுகின்றது.

அநுராதபுரம் யாழ்ப்பாணத்தின் வல்லிபுரம், திருக்கேதீஸ்வரம், கந்தரோடை, மன்னார், முல்லைத்தீவு, சிலாபம், திஸ்ஸ மஹாராம ஆகிய பல்வேறு பிரதேசங்களிலிருந்து மேற்படி இலட்சுமி தகடு நாணயத்தைக் கண்டெடுக்கக்கூடியதாக இருந்துள்ளது.

### அனுராதபுர யுக பாண்டியன் குறியீட்டுமீன் (சக்கரம்) வகை நாணயங்கள் சக்கரம்

சக்கரம் என்பது ஒருகூர்ங் கோணத்தை உருவாக்கும் இரண்டு கோடுகளைக் கொண்டுள்ளது, உச்சம் மேல் உள்ளது உடன் அவை இணைக்கும் கோணத்தின் பக்கங்களுக்கு இணையாக இரண்டு குறுக்குக் கோடுகள் உள்ளன. நான்கு கோடுகளும் (உட்புறத்தை விட சற்றே குறுகிய வெளிப்புறக் கோடுகளுடன்) ஒரே மட்டத்தில் சின்னத்தின் அடிப் பகுதியில் முடிவடைகின்றன.

இந்தச் சின்னம், அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சிலதமிழர்களால் கால்நடைகளுக்கான முத்திரையாகப்பயன்படுத்தப்பட்டது.

(தொடரும்...)



கந்தரோடையில் காணப்பட்ட இலட்சுமி நாணயக் குத்திகள்
(நன்றி: பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மாவின்...

ஒன்றின் விலை 31 ரூபாயால் குறைக் கப்பட்டுள்ளது.

400 கிராம் பால் மா பொதியின் புதிய விலை 999 ரூபாய் என லங்கா சதொச வின் தலைவர் பசந்த யாப்பா அபேவர் தன தெரிவித்துள்ளார்.

இவ் விலை குறைப்பு இன்று முதல் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக் கப்படுகிறது. (ம-7)

## சாவகச்சேரியில்...

தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கல்வயல் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் குறித்த நபர் படுகாயமடைந்த நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த 77 வயதான சுப்பிரமணியம் என் பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## நுழைவாயில்...

கிலும் வழமையாக வைக்கப்படும் நந்திகள் இம்முறை அங்கு வைக்கப் படாமல் அகற்றப்பட்டுள்ளன.

இச்செயல் பலரையும் விசனப் படுத்தியுள்ளது.

ஏலவே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பிரதான நுழைவாயிலின் இரு மருங்கிலும் உள்ள தூண்களில் அழகான இரண்டு நந்திகள் வைக்கப் பட்டிருந்தன.

எனினும் அந்தத் தூண்கள் இரண் டும் இடித்து அழிக்கப்பட்டதுடன் மிக உயர்ந்த இரண்டு தூண்கள் நிறுவப் பட்டன.

ஆயினும் அந்தத் தூண்களில் நந்தி கள் வைக்கப்படாமல் தவிர்க்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் அதற்கு ஊடகங் களில் எதிர்ப்புக் கிளம்பியபோது, மிகச் சிறிய இரண்டு நந்திகள் மூக்கு, காது என்பன உடைபட்ட நிலையில் அந்த உயர்ந்த தூண்களில் வைக்கப்பட்டன.

இருந்தும் பட்டமளிப்பு விழாவின் போது நுழைவாயிலில் அலங்கரிக்கப் படும் வளைவின் இரு மருங்கிலும் இரண்டு பெரிய நந்திகள் வைக்கப் பட்டு வந்தன.

ஆனால் இம்முறை 37ஆவது பட்ட மளிப்பு விழாவின்போது அந்த இரண்டு நந்திகளும் வைக்கப்படாமல் அகற்றப் பட்டுள்ளன.

தமிழ் மக்களின் அடையாளமாக இருக்கக்கூடிய நந்திகளை நுழைவாயி லில் வைக்காமல் தவிர்த்தமை குறித்து பொதுமக்கள் பலரும் அதிருப்தி அடைந்துள்ளதுடன் இதன் பின்னணி என்ன என்பது குறித்து ஆராய்வது அவசியம் எனவும் கருத்துரைத்துள்ள னர்.

இந்தியப் பாராளுமன்றத்தின் புதிய கட்டடத்தில் பிரதமர் மோடி, நந்தி வீற் றிருக்கும் செங்கோலை நிறுவுகின்றார். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்த இரு நந்திகளும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன எனில் இதுபற்றி சைவ அமைப்புகள் மௌ னம் சாதிப்பதுதான் விசித்திரமாக இருக்கிறது. (ம)

## குறுக்குவழியில்...

தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், இந்தியாவை வைத்து இலங்கையை மிரட்டலாம் எனச் சம்பந் தன் குழுவினர் எண்ணுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு தொடர் பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், "இலங்கை இறைமையுள்ள நாடு. எமக்கென்று ஒரு ஜனாதிபதி உள்ளார். பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி தலைமை யிலான பாராளுமன்றமே முடிவு செய் யும்" என்றும் அமைச்சர் பந்துல குண வர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ரணிலிடம்...

களின் எம்.பிக்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், "தான் ரணில் ராஜபக்ஷ அல்ல ரணில் விக்கிரமசிங்கதான் என்று தமிழ்

மக்களின் பிரதிநிதிகள் முன்னிலை யில் ஜனாதிபதி கூறியது நகைப்புக் குரியது. தற்போது ரணில் - ராஜபக்ஷ அரசுதான் ஆட்சியில் உள்ளது. ராஜ பக்ஷக்கள் பட்டாளத்தின் ஆசியில் தான் ஜனாதிபதி கதிரையில் ரணில் இருக்கின்றார். எனவே, ராஜபக்ஷக் களின் குணாதிசயங்கள் ரணிலிடம் உண்டு. அவரிடம் தமிழ் மக்கள் - அவர்களின் பிரதிநிதிகள் தீர்வை எதிர் பார்ப்பது முட்டாள்தனமானது." என் றார். (ம-7)

## ராஜபக்ஷக்கள்...

சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுடன் தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்கள் நடத்திய சந்திப்பு தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிடும்போதே மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், "ராஜபக்ஷக்கள் போல் ரணில் விக்கிரம சிங்கவும் தமிழர் களை ஏமாற்று கின்றார். அவரை நம்பி தமிழ் மக் களின் பிரதிநிதி கள் பேச்சுக்குச் செல்வதால் எந் தப் பயனும் இல்லை.

ஐக்கிய மக் கள் சக்தி ஆட்சி யில்தான் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை, இந்த நாட்டின் மக்கள் ஒருமித்தால் பெற முடியும்.

எனவே, ஐக் கிய மக்கள் சக்தி யின் ஆட்சியை நிறுவுவதற்கு அனைவரும் ஒன் றிணைய வேண் டும்" என்றார். (ம-7)

## அனை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தின் 37 ஆவது பொதுப் பட்ட மளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வில் அனை வரது கண்களை யும் கலங்கச்செய்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழ கத்தின் வவுனியா வளாகத்தைச் (தற் போதைய வவுனி யாப் பல் கலைக் கழகத்தை) சேர் ந்த திசாநாயக முதியன் சேலாகே ஹஷான் சகார திசாநாயக என்ற இளைஞன் பிரயோக கணி தம் மற்றும் கணிப் பிடலில் விஞ் ஞானமாணிப் பட் டத்துக்கு உரிய [illegible] பின்னர் உயிரு

டன் இல்லாததால், நேற்று இடம் பெற்ற 37ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் அவரது தாயாரிடம் பட்டம் கையளிக்கப்பட்டது.

குறித்த பட்டத்தினை தாயாரிடம் கையளித்த போது தாயார் கண்ணீர் மல்க பட்டச் சான்றிதழை பெற்றதுடன் இச் சம்பவமானது அங்கிருந்தவர் களின் கண்களை கலங்கச் செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

# கொழும்பில் விபத்து; இரு தமிழர் பலி

கொழும்பில் நேற்றிரவு இடம்பெற்ற கோர விபத்தில் தமிழ் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் வத்தளையைச் சேர்ந்த 26 வயதுடைய அன்ரனி மரியநாயகம், அவரது மைத்துனரான 22 வயதுடைய தேவதாஸ் கனிஸ்ரன் ஆகியோரே உயிரிழந் துள்ளனர். (ம-7)

**லக்கி 7 (Lucky 7)** — திகதி 20.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 007 — L7 இலக்கம் 0 1 — வெற்றி இலக்கினம்: கும்பம் — வெற்றி இலக்கங்கள்: 1 3 8 2 2 1

**தன நிதானய** — திகதி 2023.07.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1211 — K 15 20 21 71 K

**கொவிசெத** — திகதி 2023.07.20 — சீட்டிழுப்பு இலக்கம் 3423 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 05 35 51 77

**மெகா பவர்** — திகதி 20/07/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1529 — A 02 — வெற்றி இலக்கங்கள் 14 28 47 57

**ஹந்தஹன (HANDAHANA)** — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.07.20 — சீட்டிழுப்பு இலக்கம் 490 — இடபம் 12 23 46 50 இடபம்

**மஹஜன சம்பத** — திகதி 2023/07/20 — சீட்டிழுப்பு இலக்கம் 5181 — Z 2 9 8 3 3 2

**சுப்பர் போல் (SUPER BALL)** — சீட்டிழுப்பு வாரம் 2155 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.07.20 — தினம் வியாழக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 03 10 12 57 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,345,748.40 — "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 25 53 55 59 M

**சனிதா** — திகதி 2023.07.20 — வெற்றி வாரம் 4316 — வர்ணம் சிவப்பு — வெற்றி இலக்கங்கள் 13 28 47 63 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,665,192.00 — "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 07 24 42 43 M

**ராசி** — சீட்டிழுப்பு வாரம் 3867 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2023.07.20 — தினம் வியாழக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 14 22 33 43 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,396,400/- — "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 15 21 32 44

**கப்ருக** — திகதி 20.07.2023 — வெற்றி வாரம் 1331 — J 28 04 12 19 60 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 418,987,184.20 — "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 25 37 47 61 K

**சங்வர்தன வாசனாவ** — உத்தியோகபூர்வ முடிவுகள் — வெற்றி வாரம் 612 — திகதி 2023-07-20 — வர்ணம் நீலம் — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 31 32 44 — விதி எண் 09 — எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 21,986,016.00

**அத கோட்டிபதி (ADA KOTIPATHI)** — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 1981 — வர்ணம் இளம் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.07.20 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,899,590/- — வெற்றி இலக்கங்கள் 15 38 53 68 B — "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 03 16 45 71 S

DLB DEVELOPMENT LOTTERIES — Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ICT
A/L 2025
ஆரம்பம் :
22.07.2023
சனிக்கிழமை 6.45 am
Evershine Education Centre
123, Brown Road, Jaffna
(16329)
S.Gowsigan (B.Tech, PGDE) 0773784053
அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.

# சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## எதிர்க்கட்சி கைச்சாத்து

(கொழும்பு)

தரமற்ற மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை பொறுப்பற்ற முறையில் இறக்குமதி செய்து, சுகாதாரத் துறையை நலிவடையச் செய்து உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு காரணமான சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மைய காலங்களில், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றைப் பயன்படுத்தியதால் எமது நாட்டின் மருத்துவமனை கட்டமைப்பில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் நிகழ்ந்தன.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு அறிவுறுத்திய போதிலும், அதைப் பொருட்படுத்தாது அவசர நிலை எனக் கருதி கொள்முதல் மற்றும் பதிவுச் செயல்முறைக்கு புறம்பாக மருந் துப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதோடு, இதனால் நாட்டின் பல முக்கிய மருத்துவமனைகளில் உயிரிழப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்த ஆதரங்களை வைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

மக்களது வாக்குகளின் மூலம் பாராளுமன்றத்திற்கு வந்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட வேண்டும் என இது தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோல்,ஒரு நாட்டின் சுகாதாரம் என்பது மக்களின் வாழ்க்கை என்றும், சுகாதார சீர்கேடு மக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைவதற்கு ஒரு காரணம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.(ம-7)

Apex Travels
எம்மிடம் சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை (flight Tickets) குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம் - சென்னை
தினசரி விமான சேவைகள் இருவழிப் பயணச் சீட்டுக்கள் (Return Tickets)
67,000/= இலிருந்து...
20Kg + 5Kg பயணப் பொதியுடன்...
முன்பதிவுகளிற்கு Apex Travels
0777 597 598
(16361)
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

WORK IN CANADA
WORK PERMITS
COMPUTER TECHNICIANS
COMPUTER சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்
✓ 2 YEAR WORK PERMITS
✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
CIMS COLLEGE 0777-068-777
(C-6946)

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16033)
T.P:077 544 8503

WORK IN UK
WORK PERMITS
CIVIL ENGINEERS
CIVIL ENGINEERING சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்து CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்
✓ 5 YEAR WORK PERMITS
✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✓ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிட உரிமை (Permanent Resident)
CIMS COLLEGE 0777-068-777
(C-6946)

## தாய்ப்பால் கொடுப்பதற்கான நேர அவகாசம் நீடிப்பு

சிறு குழந்தைகளுடன் பணிபுரியும் தாய்மார்களுக்கு தாய்ப்பால் கொடுப்பதற்கான ஒரு மணி நேர அவகாசம் இரண்டு மணி நேரமாக நீட்டிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் துறை மகளிர் மற்றும் குழந்தைகள் நல ஆணையர் என்.எம்.ஒய். துஷாரி தெரிவித்துள்ளார்.

மேலும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள தாய்ப்பால் வாரத்திற்கான சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

## இறக்குமதி...

வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சலைத் தடுக்கும் நோக்கில் நிதியமைச்சினால் பல்வேறு பொருட்களுக்கு இறக்குமதித்தடையும், மட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன.

தற்போது நாட்டின் பொருளாதாரம் ஓரளவுக்கு மீட்சியடைந்துவரும் நிலையில், இறக்குமதி தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் படிப்படியாகத் தளர்த்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே 328 பொருட்களின் இறக்குமதி தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. (ம-7)

## ரணில்...

இந்தியாவிற்கு நேற்று விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இந்தியாவுக்கு 2 நாட்கள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று மாலை வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

டெல்லியை சென்றடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்திய வெளிவிவகார துணை அமைச்சர் வி.முரளிதரன் வரவேற்றுள்ளார்.

இதன்பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் வரவேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இரு நாட்டு உறவுகள் தொடர்பில் ஜெய்சங்கருடன் ரணில் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பிரதமர் மோடியுடன் ரணில் இன்று கலந்துரையாடவுள்ளார். குறித்த கலந்துரையாடலில் தமிழர்களின் பிரச்சினை மற்றும் 13 ஆம் திருத்தம் தொடர்பில் கலந்துரையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## மரண அறிவித்தல்

### சின்னட்டி முத்துலிங்கநாதன் (முத்து மாஸ்ரர்)

(ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம் ஊர்காவற்துறை. பளை)



அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து மாஸ்ரர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சின்னட்டி முத்துலிங்கநாதன் அவர்கள் 20.07.2023 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - பொன்னம்மா தம்பதிகளின் இளைய புதல்வனும் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - கமலாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் கிருஸ்ணகுமாரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான லிங்கேஸ்வரநாதன், செல்வேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரகுமாரி, சந்திரகுமாரி, காலஞ்சென்றவர்களான சிவராசா, கலாவதி மற்றும் அன்ரன், ஜோன் அன்ரன் ஆகியோரின் மைத்துனரும் பிரசாந்(உத்தியோகத்தர் இலங்கை வங்கி), ரவிசாந்(தபால் அதிபர் - கண்டி), றுக்சாந்(இயக்குநர் DBMS கணினி நிறுவனம் சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரோஜனி(விலைமதிப்பீட்டுத் திணைக்களம் யாழ்ப்பாணம்), நிசானி(ஆசிரியர் DBMS கணினி நிறுவனம் சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வகிஷா(புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்), மிதுலா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 21.07.2023 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் இல.50, கலைமகள் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரசாந் - 077 634 3696
ரவிசாந் - 076 083 6417
றுக்சாந் - 077 295 3325

தகவல்:-
குடும்பத்தினர்
(16362)

பெண் பணியாளர் தேவை
பலாலி வீதி உரும்பிராயில் வயோதிப பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பாராமரிக்க பெண் உதவியாளர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தகவல்களுக்கு
077 844 6219
077 112 6353
(16359)

வேலையாட்கள் தேவை
தங்க நகை விற்பனைத் துறையில் அனுபவம் வாய்ந்த ஆண்கள் மற்றும் பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை.
22.07.2023 சனிக்கிழமை நேரில் வரவும் காலை 09 - மதியம் 12 வரை
அருண் ஜுவல்லரி
இல.09, புதிய மாநகர சபை கட்டிட தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 772 9525
(16358)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.